பதிவுஎண் 2041

பதினாறு பக்கம்
தனிப்பிரதி விலை அணா ஒன்று.




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1–12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஷு மார்கழி-மீ கஉ-உ (27—12—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் ஙு-ச



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## சேர்ந்தமங்கலம் ஜமீன்தார்

### யூனியன் தேர்தல்,

17-12-25—ந் தேதி வியாழக்கிழமை மாலை இவ்வூர் யூனியன் போர்டுக்கு அக்ராசனாதிபதி தேர்ந்தெடுப்பதற்காக ஒரு விசேஷ கூட்டம் கூடிற்று. 10 அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். யூனியன் மெம்பர் ஸ்ரீமான். சீத்தாராம செட்டியாரவர்கள், சேர்ந்தமங்கலம் ஜமீன்தார், ஸ்ரீமான். ஐராவத உடையாரை யூனியன் தலைமை ஸ்தானத்துக்குப் பிரேரேபித்தார். அதை ஸ்ரீமான். அண்ணாமலைப் பண்டாரம் ஆமோதித்தார். போட்டியின்றி, ஏகமனதாய் ஜமீன்தார் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். ஜமீன்தார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்ற செய்தியைக்கேட்ட இவ்வூர் ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்ததற்கு அளவில்லை. நண்பர்கள் புகழ்மாலை கூறினார்கள். ஜமீன்தார், அவற்றிற்குப்பதிலளித்து தமது நன்றியறிதலைச் செலுத்தி மெம்பர்களைத் தம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார். அங்கத்தினர் ஸ்ரீமான். வரதராஜுலு செட்டியாராலும், மற்றும் பலராலும் தலைவருக்கு புஷ்பமாலையிட்டு மேளவாத்தியத்துடன், வரவேற்று ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது. இடையில் வழி நெடுக ஆங்காங்கு மாலையிடப்பட்டது. கூட்டம் தெய்வீக ஆஸ்ரமத்துக்குச் சென்றதற்குப்பின், ஆஸ்ரமக்காரியதரிசி மாலையிட்டு வரவேற்றபின் பெரியகுளம் ஜமீன்தார் ஸ்ரீமான். ப. முத்துசாமி உடையார் மகா ஜனங்களின் சார்பாகத்தலைவரை வரவேற்று வாழ்த்துக் கூறி, தலைவரின் அரியசக்தியைப்பற்றியும், கடமையைப்பற்றியும் சிறிதுநேரம் பேசியபின், ஜமீன்தார் அவர்கள் தன்னால் கூடியளவு யூனியனுக்கு உழைப்பதாகவும், மெம்பர்களுடைய ஒத்துழைப்பைத் தான் ரொம்பவும் விரும்புவதாகவும், சொல்லிக் கொண்டார். பின்பு, பெருத்த ஆரவாரங்களினிடையே கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பெற்று கூட்டம் கலைந்தது என ஸ்ரீமான் கி. வ. ஜெகந்நாதன் எழுதுகிறார்.

## ஜமீன்தார்கள் வீட்டில் பிராமண எலிகள்

டில்லி ராஜாங்க சபைக்கு இவ்வருடம் நடந்த தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களிலொருவரான ஒரு பிராமணரல்லாத பிரபு கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பெரிய ஜமீன்தாரொருவருக்கு தனக்கு வோட் செய்யும்படி கேட்டு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதியிருந்தார். மற்றொரு பிராமண கனவானும் தனக்கு வோட் செய்ய வேண்டுமாய் ஒருகடிதம் போட்டிருந்தார். தேர்தல் காலம் சமீபத்திலிருக்கும்போது பிராமணரல்லாத கனவானுக்காக கோயமுத்தூரிலுள்ள ஒரு பிரபல யந்திரசாலையின் நிர்வாகி ஒருவர் வோட்கேட்பதற்கு ஜமீன்தாரிடம் நேரில் சென்று, விஷயத்தை எடுத்துச்சொன்னார். உடனே ஜமீன்தார் இதைப்பற்றி, தனக்குத் தகவலே தெரியாதே; ஒரு பிராமணர் தான் கடிதம் எழுதியிருந்தார்; அவருக்கு வோட் செய்வதாக நமது குமஸ்தாவிடமும் சொல்லிவிட்டேன்; என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, குமஸ்தாவான பிராமணர், தங்களுக்கு நான்கு வோட் இருக்கிறது; ஒரு வோட் தாங்கள் சொன்னபடி பிராமணருக்குச்செய்து விட்டாலும், மற்றும் ஒரு வோட் செட்டியாருக்கும் கொடுக்கலாமென்றார். உடனே வோட்டுக் கேட்கப்போன கனவான், தங்களுக்கும் இதுவிஷயத்தைப்பற்றி 2, 3 கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, அது தங்களுக்குச் சேராத காரணமென்னவென்று கேட்டார். ஜமீன்தார் ஆத்திரப்பட்டு, ஐயர் குமாஸ்தாவைப்பார்த்து, என்ன ஐயரே தபால் வந்ததா? என்றுகேட்டார். ஐயர், ஒன்றோ, இரண்டோ, வந்ததாக ஞாபகம்; ஆனால் அதைத்தங்களிடம் சொல்ல மறந்துவிட்டேனே, என்னமோ என்று சொல்லி மழுப்பிவிட்டார். உடனே, ஜமீன்தாரும், கனவானும், பிராமண சூழ்ச்சிகளைப்பற்றி ஞாபகப்படுத்திக் கொண்டார்கள். எவ்வளவுதான், பிராமணரல்லாத ஜமீன்தார்களும், பிரபுக்களும் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்திருந்தாலும்; ஜமீன்தாரென்கிற பெருமைக்குண்டான சுகங்களெல்லாம், அநுபவிக்கவேண்டுமானால், பிராமணர்களில்லாமல் இவர்களால் ஒன்றும் முடியவே முடியாது. ஆதலால் ஒவ்வொரு ஜமீன்தார்களும் மிராஸ்தார்களும், பெரிய பண்ணைகளும் தங்கள் நன்மையின் பொருட்டு ஒவ்வொரு பிராமணருக்குள் தான் அடக்கமாயிருக்கிறார்கள். இவையெல்லாம் மாறாமல், ஜஸ்டிஸ் கக்ஷியின் வெறுந்தீர்மானங்கள் மாத்திரம், பெரிய நன்மையொன்றும் செய்துவிடாது. டி. எஸ். பி.

குறிப்பு:—இதை நாம் நமது அநுபவத்திலேயே பார்க்கிறோம். நமது "குடி அரசு"ப் பத்திரிக்கைக்கூட பிராமணாதிக்கமுள்ள சில ஜமீன்தார்களிடமிருந்தும், பல பிரபலமிராஸ்தார்களிடமிருந்தும் திருப்பியனுப்பப்படுவதை நாம் பார்க்கிறோம். அவர்களை நேரில்காண சந்தர்ப்பம் நேர்ந்த காலத்தில் தங்களுக்குப் பத்திரிகை வந்ததும், திருப்பியனுப்பப்பட்டதும் இரண்டும் தெரியாதென்றே சொல்லியிருக்கிறார்கள். இப்படி சொன்னதோடு ஒரு பெரிய ஜமீன்தார் தனதுவருத்தத்தைத் தெரிவித்தும் கொண்டார். ஆனால், இவர்களை, உங்கள் பிரைவேட் செக்ரடேரி பிராமணர்தானேயென்றுகேட்டதற்கு மிராஸ்தார்கள் ஆம் என்றுசொல்லிக்கொண்டு சிரித்தார்கள். ப—ர்

## ஆதி திராவிடர் ஆலயப்பிரவேசக் குற்றம் விடுதலை.

### பிராமணப்பத்திரிக்கைகள் செய்யுங் காரியத்தையே திராவிடனும் செய்யவேண்டுமோ?

திருப்பதி மகந்துக்கு சம்பந்தப்பட்ட ஒரு கோவிலுக்குள் பஞ்சமர் என்போர் ஒருவர் நுழைந்ததற்காக தண்டனை விதிக்கப்பட்டது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அத்தண்டனை மேல் சித்தூர் சப்டிவிஷனல் மேஜிஸ்ட்றேட் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டதில் மேற்படி தண்டனை ரத்தாகிவிட்டது. அந்த வழக்கில் ஸ்ரீமான். சித்தூர் பி. முனுசாமி நாயுடு ஆஜர் ஆனார் என்று திராவிடன் பத்திரிகை எழுதியிருக்கிறது. ஸ்ரீமான். சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் கோர்ட்டில் ஆஜராகி எதிரிக்காக பேசினார் என்பதை எழுதவிட்டுவிட்டது நியாயமல்லவென்று நினைக்கிறோம்.

ஆனால் பிராமணப்பத்திரிகைகள் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியார் எதிரிதரப்பில் வாதம் செய்தார் என்று எழுதி, ஸ்ரீமான். B. முனிசாமி நாயுடு பேரை விட்டு விட்டது. அது அவர்கள் ஜாதி புத்தி திராவிடன் ஏன் அதைபின்பற்றவேண்டும்? சித்தூர் கோர்ட்டில் விடுதலையாகிவிட்டதால் நமது ஆதிதிராவிட சகோதரர் தப்பித்துக்கொள்ள முடியுமா? இதைப் பிராமணர்கள் லேசில் விட்டு விடுவார்களா? சட்டமெம்பரைப்பிடித்து, அட்வொகேட் ஜனரலைப்பிடித்து, தங்களுக்கு வேண்டிய ஐகோர்ட்டு ஜட்ஜியைப்பிடித்து, மறுபடியும் அந்தக்கேசுக்கு உயிருண்டாக்கி தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ளப் பகீரதப்பிரயத்னப்படாமல் போக மாட்டார்கள், என்பதை அறிய விரும்புகிறோம்.


## முக்கிய கவனிப்பு.

### 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடிஅரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 ஹூ அச்சடித்த அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது சரியான காலம் காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-ஹூ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0

நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0

நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-ஹூ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ 130, மதராஸ்.

## கோயமுத்தூர் ஸ்ரீ. தியாகராய செட்டியார் முனிசிபல் ஆஸ்பத்திரி திறப்புவிழா.

(நமது நிருபரிடமிருந்து)

கோயமுத்தூர் டவுன் ரெங்கைய கவுண்டர் வீதியில், முனிசிபல் ஸ்தலத்தில் கோயமுத்தூர் பிரபல வர்த்தகரும், தேவாங்ககுலதிலகருமான ஸ்ரீமான் வெரிவாட செட்டியாரவர்களால் கட்டி, முனிசிபாலிட்டிக்கு ஸர். பி. தியாகராய செட்டியார் பேரால் பொது நன்மைக்காக உதவப்பட்ட, ஸ்ரீ தியாகராய ஆஸ்பத்திரிக் கட்டிடத்தைத் திறந்துவைக்க, கோயமுத்தூர் முனிசிபல் சேர்மன் அவர்களாலும், ஸ்ரீமான். வெரிவாட செட்டியார் அவர்களாலும் அழைக்கப்பட்ட அழைப்புக்கிணங்கி, ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் நாளது டிசம்பர் மீ 16-ந்தேதி புதன் கிழமை காலை மெயிலில், கோயமுத்தூருக்கு வந்தார். அன்று மாலை 5-மணிக்கு ஷை ஆஸ்பத்திரிக் கட்டிடத்து முன்பு அமைக்கப்பட்டிருந்த பந்தலில், திரளான ஜனங்கள் கூடியிருக்க, திறப்புவிழா கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ஜில்லா டாக்டர், முனிசிபல் கவுன்சிலர்கள், ஊத்துக்குளி ஜமீன்தார் முதலியவர்களும், மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், ஸ்ரீமான். R. K. ஷண்முகம் செட்டியார் M. L. A. உள்பட பலரும் விஜயம் செய்திருந்தார்கள். அது சமயம் கோவை முனிசிபல் சேர்மன். ராவ்சாகேப். சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரவர்கள், ஸ்ரீமான். வெரிவாட செட்டியாரவர்களால், ஸர் தியாகராயர் பேரால் கட்டிக்கொடுக்கப்பட்ட ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை முனிசிபாலிட்டியின் சார்பாக மிகுந்த நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்வதாகவும், ஸ்ரீமான். வெரிவாட செட்டியார், இந்த ஆஸ்பத்திரி மட்டுமன்றி, ஸ்ரீ சாரதா இந்து பெண்பாடசாலையொன்று ஏற்படுத்திக்கொடுத்து, அதற்காகும் முழுச்செலவையும் அவரே கொடுத்துவருவதாகவும், இப்பேர்ப்பட்ட தர்மிஷ்டர் இப்போது கொடுத்துள்ள இவ்வாஸ்பத்திரிக் கட்டடமானது, வெகு சீக்கிரமாக பிரசவ வார்டுகளை உடையதாயும், குழந்தைகளின் சிகிச்சைக்கென்று வேலைசெய்யக் கூடியதாயும் உள்ள ஆஸ்பத்திரியாக பிரபல்யமடையுமென்று தாம் நம்புவதாகவும், மற்றும் ஸ்ரீமான். வெரிவாட செட்டியாரவர்களின் பல தர்மங்களைப்பற்றியும் வெகுவிரிவாகப்பேசினார். பிறகு, ஜில்லா டாக்டர் ஸ்ரீ சால்மேர்ஸ்துரை அவர்கள் ஸ்ரீமான். வெரிவாட செட்டியாரின் தர்ம சிந்தையைப் பாராட்டுவதாகவும், இந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு பிரபுவும் இவரைப்பின்பற்ற வேண்டுமென்றும் ஆங்கிலத்தில் பேசினார். இதனை கோவை காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீமான். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ. அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார். பின், ஸ்ரீமான். வெரிவாட செட்டியாரவர்களும், முனிசிபல் சேர்மன் அவர்களும், ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரைக் கட்டிடத்தைத்திறந்து வைக்கும்படி கேட்டுக்கொள்ள, ஸ்ரீமான். நாயக்கர் கட்டிடத்தைத் திறக்கும்போது, சொன்னதாவது:—

நமது பெரியாரும், பூஜிக்கத்தகுந்தவருமான காலஞ்சென்ற, ஸர். பி. தியாகராய செட்டியாரவர்களின் பேரால் கட்டப்பட்ட இந்தக்கட்டிடத்தை ஸர். பி. தியாகராய செட்டியாரவர்களின் திருநாள் சமயத்திலேயே திறந்து வைக்கும் பெருமை எனக்கு அளித்ததற்கு நான் பெருமையடைவதோடு, என் மனப்பூர்வமான நன்றியறிதலையும் செலுத்துகிறேன். பெரியோர்களுடைய திருநாளைக் கொண்டாடுவது நமக்குப் பூர்வீகமான வழக்கம். ஆனால், அப்பெரியார்களைப் பின் பற்றுவதில் நாம் கிரமமாய் நடந்து கொள்வதில்லை. ஸ்ரீமான். தியாகராய செட்டியாருக்கு, அவருடைய தேச சேவைக்காக இந்நாட்டு மக்கள் எல்லோரும் கடமைப்பட்டிருந்த போதிலும், சிறப்பாக பிராமணரல்லாதார் என்போர் மிகவும் கடமைப்பட்டவர்கள் என்று சொல்லுவேன். தென்னாட்டில், பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்குழைத்து, பிராமணரல்லாதாரின் சுயமரியாதையை உணரும்படி செய்தவர், நமது தியாகராயரேயாவார். அவர் கொஞ்சமும் சுயநலமில்லாமலும் அடிக்கடி மாறுபட்ட அபிப்ராயமில்லாமலும், விடாமுயற்சியோடு உழைத்து வந்தவர். அப்பேர்ப்பட்டவர்பேரால் இது போன்ற விஷயங்கள் மாத்திரமல்லாமல், இன்னுமநேக காரியங்கள் செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம் அவருடைய பெருமை அவர் இருந்தபோது விளங்கியதைவிட அவர் இறந்த பிறகுதான் அதிகமாக விளங்கிக் கொண்டு வருகிறது இங்குள்ள ஒவ்வொருவரும், நமது தியாகராயரைப்பின்பற்றி உழைக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் நாம் அவருக்குச்செய்யும் மேலான ஞாபகக்குறிப்பு என்று சொன்னதோடு, இவ்வித ஆஸ்பத்திரிகள் நமது நாட்டில் பெருகுவதானது, நாட்டில் வியாதிகள் அதிகமாய்ப் பெருகி வருவதையும், நாட்டுபழைய வைத்திய முறைகள் அழிக்கப்பட்டுப் போவதையும், காட்டுவதற்கு நிதர்சனமாக விளங்கினாலும், நமது ஸ்ரீமான். வெரிவாடா செட்டியார் தர்ம சிந்தையோடும், உதார குணத்தோடும் செய்திருக்கும் இக்கைங்கிரியத்தை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. கடவுள் அவருக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் கொடுத்துமென்மேலும் பல தர்ம கைங்கிரியத்தைச் செய்ய கடவுள் அருள் புரிவாராக என்று சொல்லி கட்டிடத்தைத் திறந்து வைத்தார். பிறகு, ஸ்ரீமான். செட்டியாரின் குமாரர், ஸ்ரீமான். வி. ஈஸ்வரன் செட்டியார் பி, ஏ. பி. எல். அவர்களால், வந்தனோபசாரங்கூறி, சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

---

## கோயமுத்தூரில், தென்னிந்திய நலஉரிமைச் சங்ககிளை ஸ்தாபனம் திறப்புவிழா

தென்னிந்திய நலவுரிமைக் கிளைச்சங்க ஸ்தாபனத்திற்காக, ஸ்ரீமான். வெரிவாட செட்டியாரவர்களால் உதவப்பட்ட கட்டிடத்தில், ஸ்ரீமான். எம். சம்பந்த முதலியார் அக்ராசனத்தின் கீழ், ஆரம்பவிழா நடைபெற்றது. அது சமயம் பிராமணரல்லாத இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ பிரமுகர்களான அநேக தலைவர்கள் ஆஜராயிருந்தார்கள். ஆரம்பத்தில் அக்ராசனாதிபதி அவர்களாலும், கோயமுத்தூர் முனிசிபல் சேர்மனும், டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டுமான, ஸ்ரீமான். ராவ்சாகிப். சி. எஸ். ரத்தினஸபாபதி முதலியாராலும், தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அவசியத்தையும், மகாத்மாவின் நிர்மாணத்திட்டம் பிராமணரல்லாதாருக்கு எவ்வளவு அவசியமானதென்பதைப்பற்றியும் சுருக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டது. பிறகு, அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரை பேசக் கட்டளையிடும்படி அங்குள்ள பிரமுகர்கள் அக்ராசனரை கேட்டுக் கொண்டதற்கிணங்க, அக்ராசனரும் ஸ்ரீமான். நாயக்கரைப் பேசும்படி அழைத்தார். ஸ்ரீமான். நாயக்கர் பேசியதின் சுருக்கம்:—

தான் இக்கூட்டத்திற்கு வரக்கூடுமென்றாவது, இதில் பேச சந்தர்ப்பம் கிடைக்குமென்றாவது ஒருபோதும் எதிர்பார்க்கவேயில்லையென்றும், திறப்புவிழாவிற்கு வந்தவனை இதுவென்று அழைத்ததிற்காகவும், இங்கு பேசும்படி கட்டளை யிட்டதற்காகவும், அழைத்தவர்களுக்கும், அக்ராசனாதிபதிக்கும் வந்தனம் செய்வதாகவும், இக்கூட்டத்திலுள்ள பிரமுகர்கள் எல்லாம் தன்னுடைய பழைய ஆப்தநண்பர்களென்றும், இவர்களில் அநேகம் பேர் நெருங்கிய பந்துக்களைப் போன்றவர்களென்றும், ராஜீய அபிப்பிராயங்காரணமாக இங்குள்ள அத்தனை பேரையும் நாலைந்து வருடகாலமாக தீண்டாதவர்போல் நினைத்து, தான் ஒதுங்கியிருந்ததாகவும், இப்பிரிவினை ஏற்படுவதற்குமுன் கோயமுத்தூருக்கு வந்தால் இங்குள்ள ஒவ்வொரு சிநேகிதர் வீட்டிலும் நாலுநாள், ஐந்துநாள் தங்கி, விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தவன், கொஞ்சக் காலமாக இவ்வூருக்கு வந்தால் பிராமணன் ஹோட்டலுக்காவது போய்ச்சாப்பிடுவதேயொழிய, இந்த அருமையான சிநேகிதர்கள் வீட்டுக்குப்போகாமல் கூட, தான் அவ்வளவு ராஜீய பத்தியமாய் இருந்ததாகவும், இப்பொழுது காங்கிரசில் சுயராஜ்ய கட்சி தோன்றியபின், இவ்வளவு நாள் கொடுமையான பத்தியமாயிருந்தது அவசியமில்லாததென்று தோன்றும்படி செய்து விட்டதாகவும், ஜஸ்டிஸ்கக்ஷியின் ஆரம்பராஜீய திட்டத்திற்கும், சுயராஜ்யக்கக்ஷியின் தற்கால ராஜீயத்திட்டத்திற்கும், உள்ள பெரிய வித்தியாசமெல்லாம், ஜஸ்டிஸ் கக்ஷி உண்மை பேசுகிறது, சுயராஜ்யக்கக்ஷி

தந்திரமாய்ப்புரட்டு பேசுகிறது என்பதைத்தவிர வேறு பிரமாதமான வித்தியாசம் எதுவுமில்லையென்றும், இந்தக்காரணத்தால்த்தான் காங்கிரஸிற்கும் வரவர மதிப்புக் குறைந்து கொண்டு போவதோடு, மங்கிக்கிடந்த ஜஸ்டிஸ் கட்சிக்கும், தேசத்தில் செல்வாக்கு, இப்பொழுது கொஞ்சம் ஏற்பட்டு வருகின்றதென்றும், இந்த சந்தர்ப்பத்தை ஜஸ்டிஸ் கட்சியார் இழந்துவிடாமல், தேசத்திற்கும், பிராமணரல்லாதார் சமூகத்திற்கும் உண்மையாய் உழைக்க முன்வரவேண்டுமென்றும், காங்கிரஸ் தேசத்திற்கு அநுகூலமான கொள்கைகளையும், பிராமணரல்லாதாருக்கு மிகவும் அநுகூலமான திட்டங்களையும் வைத்து, உண்மையாய் வேலைசெய்து பலதியாகங்களுக்கும், கஷ்டங்களுக்கும் தயாராயிருந்து சிலபேராவது உழைத்து வந்ததின் பலனாகத்தான் காங்கிரஸிற்கு அதிக மதிப்பேற்பட்டதோடு, ஜஸ்டிஸ் கட்சியையும், யாரும் லக்ஷியம் செய்ய அவசியமில்லாததாய்ப் போய்விட்டது என்றும், இப்போது சுயராஜ்யக்கட்சி தோன்றியதின்பலனாய், தேசநன்மைக்கான கொள்கைகளும் போய் நிர்மாணத்திட்டங்களும் பின்பட்டு, உத்தியோக ஆசையும், பிராமணாதிக்கத்திற்கநுகூலமான கொள்கைகளும் காங்கிரஸில் முற்பட்டு நிற்பதற்கு, சுயராஜ்யக் கட்சியார் பிரயத்தனம் செய்வதாலும், காங்கிரசும் அதற்கு இணங்குவதாலும், சுயராஜ்யக் கட்சியைவிட ஜஸ்டிஸ் கட்சி மோசமானதல்லவென்னும் எண்ணம் தேசத்தில் உதிக்க ஆரம்பித்துவிட்டதென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் முன்னேற்றத்துக்கு இந்த எண்ணம் மாத்திரம் போதாதென்றும், இதுவரையில்ஜஸ்டிஸ் கட்சிக்கு பொதுஜன அநுகூலமான திட்டம் எதுவும் இல்லையென்றும், பாமர ஜனங்களிடம் இதற்குச் செல்வாக்கில்லாததற்குஇதுவொருகாரணமென்றும், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, கதர் முதலிய திட்டம் ஜஸ்டிஸ் கட்சியில் தாண்டவமாட வேண்டுமென்றும், தென்னாடு முழுதும் இவைகளைப் பரப்பச் சரிவரப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும், இவ்வித காரியங்கள் ஜஸ்டிஸ் கட்சியார் செய்யாவிட்டால், எதிரிகள் விஷமத்தால் கட்சியே மறைந்து போகுமென்றும், வெறும் உத்தியோகமும், ஆங்கிலப் படிப்பும் பிராமணரல்லாதாருக்கு நன்மை உண்டாக்கிவிடாதென்றும், நீங்கள் சில உத்தியோகங்களை அடைந்ததினால் தேசத்தில் என்னபலன் உண்டாய் விட்டதென்றும், நீங்கள் அதிகமதிகமாய் ஆங்கிலம் படிக்கப்படிக்க, உத்தியோகம் பெறப்பெற, நமது நாடு பிராமணர்களால் எவ்வளவு கஷ்டப்படுகிறதோ, அவ்வளவு கஷ்டம் உங்களாலும் படவேண்டியதாகிவிடுமென்றும், பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டுமானால், இங்குள்ளவர்கள் கிராமங்களுக்குச் செல்லவேண்டுமென்றும், கிராமஜனங்களைக் கலகம் செய்து கொள்ளாமலும், கோர்ட்டுக்குப் போகும் மூலம் பெரும்பாலும் பிராமண வக்கீல்களிடமும், அதிகாரிகளிடமும் சிக்கி தங்களுடைய பொருள்களை பீஸாகவும், லஞ்சமாகவும் கொடுத்து பாழாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும், ஆங்கிலப்பள்ளிக்கூடம் பரவியதன் காரணமாகவே, கிராமங்களில் குடியானவர்கள் பேரால் இருந்த பூமிகளெல்லாம், இப்போது பிராமண வக்கீல்கள் பேராலும், அதிகாரிகள் பேராலும், லேவாதேவிக்காரர் பேராலும், மாறிக்கொண்டு வருகின்றதென்றும், இதற்கு சாக்ஷிவேண்டுமானால் கவர்ன்மெண்டு செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரைப் பாருங்களென்றும், இவற்றைத்தடுக்காமல் மந்திரி உத்தியோகம் பெறுவதினாலும், பட்டங்கள் பெறுவதினாலும், உங்கள் பிள்ளைகள் சிலருக்கு உத்தியோகங்கள் சம்பாதிப்பதினாலும், உங்கள் கட்சி எந்த விதத்தில் பிராமண சுயராஜ்யக் கட்சியைவிட மேலானதாகிவிட்டதென்றும், இந்த நிலைமையில் ஜஸ்டிஸ் கட்சி இருந்துகொண்டே வருமானால், என்போன்றவர்கள் தொண்டை நீங்கள் எதிர்பார்க்க முடியாதென்றும், மகாத்மாவின் நிர்மாணத்திட்டங்களை ஏற்றுக்கொண்டு, காரியத்தில் அதைச் செய்யக் கட்டளையிடுவீர்களானால், அதை நான் சிரமேற்கொண்டு தொண்டு செய்யக்காத்துக் கொண்டிருக்கிறேனென்றும், சொன்னதோடு, தான் சொன்னவைகளில் ஏதாவது தங்கள் மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்குமேயானால், மன்னிக்கவேண்டுமென்றும், தான், தன் மனதில் உண்மையென்றுபட்டதைத்தான் ஒளிக்காமல் சொல்லவேண்டுமென்கிற ஆசையால் சொன்னதேயொழிய, யாருக்கும் வருத்தம் உண்டாக்கவேண்டுமென எண்ணி சொல்லவில்லையெனக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

---

## கோயமுத்தூரில் 17-ந் தேதி மாலை, டவுன் ஹாலில் பொதுக் கூட்டம்.

இம்மாதம் 17-ந்தேதி கோயமுத்தூர் டவுன் ஹால் மைதானத்தில் ஸ்ரீமான். டி. சுப்பிரமணியபாண்டே அவர்களின் அக்ராசனத்தின்கீழ், ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஓர் உபந்யாசம் செய்தார்.

அதில் நமது நாட்டுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தின் அவசியத்தைப்பற்றியும், காஞ்சீபுரம் மகாநாட்டு நடபடிக்கைகளைப்பற்றியும், நிர்மாணத்திட்டங்களைப்பற்றியும், எடுத்துச்சொல்லி வருகையில் அவர் முக்கியமாய்க் குறிப்பிட்டதாவது:—

தற்சமயம் நமது தேசத்திலுள்ள பல கட்சிகளுக்கும் ராஜீய திட்டம் ஏறக்குறைய ஒன்றாகி விட்டது. நிர்மாணத்திட்டத்தை நடத்திவைப்பதில் எந்தக்கட்சிக்காரராயிருந்த போதிலும், நிர்மாணத்திட்டம் நடத்துவதற்குப் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. காங்கிரசை ஒப்புக்கொள்ளாதவர்களும் காங்கிரசில் சேரப்பயப்படுபவர்களும் கூட நிர்மாணத்திட்டத்தை நடத்திக்கொண்டு போகலாம். காங்கிரசில் சேர்ந்தால் தான் நிர்மாணத்திட்டத்தை நடத்தலாம்; இல்லாவிட்டால் நடத்த முடியாது, என்னும் பயம் உங்களுக்கு வேண்டாம். மகாத்மாவின் நிர்மாணத்திட்டத்தை ஆதரிக்கக்கூடிய கட்சி எதுவாயிருந்தாலும் அவைகளெல்லாம் எனக்கு ஒன்றுதான். நிர்மாணத்திட்டமில்லாத எந்த ராஜீயக் கட்சியையும் தேசத்திற்கு அநுகூலமானதென்று சொல்லமாட்டேன். நிர்மாணத்திட்டத்தில்த்தான் தேசத்தின் விடுதலை இருக்கிறது. காங்கிரசிலும் நிர்மாணத்திட்டத்தின் ஆதிக்கமிருந்ததினால்த்தான் காங்கிரசிற்கும் மூலைமுடுக்குகளிலெல்லாம் மதிப்பு இருந்து கொண்டு வந்தது. இப்போது நிர்மாணத்திட்டத்தின் ஆதிக்கம் ஒழிந்து, காங்கிரசினால் ஒரு காலத்தில் உமிழ்ந்து ஒதுக்கித்தள்ளப்பட்ட சட்டசபைப் பைத்தியத்தையும், உத்தியோகப் பைத்தியத்தையும் மறுபடியும் காங்கிரஸ் எடுத்துக் கொள்ளுமானால், பழைய காலத்துக் காங்கிரஸ் யோக்யதைக்குத்தான் மறுபடியும் வந்துவிடுமென்றும், ஆகையால் நிர்மாணத்திட்டத்தைப் பிரதானமாகக் கொண்ட எந்தக் கட்சியானாலும், நீங்கள் அதிற்சேர்ந்து மனப்பூர்த்தியாய் உழைக்கவேண்டுமென்றும், தீண்டாமை விஷயத்தில் ஏற்படும் எதிர்ப்புக்களை தைரியமாய் முன்னின்று தாக்கவேண்டுமென்றும், அவற்றை அஜாக்ரதையாய் விட்டு விட்டீர்களேயானால் நமது மதமும், சமூகமும் அடியோடு போய்விடுமென்றும், கதர் விஷயத்தில் கவலை எடுத்துக் கொள்ளாமல் சட்டசபைப் பிரவேசத்திலும், உத்தியோக வேட்டையிலுமே கவனத்தைச் செலுத்துவீர்களானால், தேசத்தில் ஏழைகள் அதிகமாய்ப் போய் கொலை, கொள்ளை முதலியதுகள் பரவிவிடுமென்றும், மதுவிலக்கும் நமது தேச மக்களின் ஒழுக்கத்திற்கு மிகவும் முக்கியமானதென்றும் சொல்லிக்கொண்டிருக்கையில், ஒரு பிராமணர் மத்தியில் எழுந்து, நீங்கள் ஒத்துழையாதாரராச்சே, எப்படி வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்கலாம்? என்று சொன்னார். அதற்கு ஸ்ரீமான். நாயக்கர் ஒத்துழையாமை பெல்காம் காங்கிரசின்போதே ஒதுக்கிவைத்தாகிவிட்டதென்றும், சட்டசபைப் பிரவேசம் காங்கிரஸ் அனுமதித்து விட்டதென்றும், சுயராஜ்யக் கட்சிக்கு மாத்திரம் சம்பந்தமில்லாத தாலூகாபோர்டு, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தலஸ்தாபனங்கள் இருக்கிறதென்றும் இவைகளுக்குப்போக இஷ்டப்படும் ஜனங்களுக்கு அவரவருக்கு உண்டான உரிமைகள் அவரவருக்குக் கிடைப்பதில் ஒருவருக்கொருவரை ஏமாற்றவும், சூட்சிகளும், கலவரங்களும், நடக்கவும் செய்ய இடம் வைக்கக்கூடாதென்றும், ஆனதால் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்பது காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாகாதென்றும், தேசத்தில் பல வகுப்பாரின் ஒற்றுமைக்கும், நம்பிக்கைக்கும் வகுப்புவாரிப்பிரதிநிதிவத்வம் அவசியமானதென்றும் சொன்னார். பிறகு மற்றொருவர் தேவஸ்தான மசோதாவைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று, அக்ராசனாதிபதிக்குச் சீட்டு அனுப்பியதின் பேரில், அதைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல அக்கிராசனாதிபதி கட்டளையிட்டார். அதன் பேரில் ஸ்ரீமான்.

நாயக்கர் பேசுகையில் தேவஸ்தான சட்டமானது நமது நாட்டில் வெள்ளைக்காரர் வந்தபின்புங்கூட அதாவது 1817—1863 வருடங்களிலேயே இந்துமத தர்மபரிபாலனத்தைப் பற்றி சர்க்காரார் என்கிற முறையில் சட்டம் செய்திருக்கின்றார்களென்றும், அந்தச் சட்டம் போராதென்றும், இனியும் கண்டிப்பான சட்டங்கள் செய்யவேண்டுமென்றும் அநேக வருஷங்களாக காங்கிரஸ் கான்பரன்ஸ் முதலிய ராஜீய மகாநாடுகளின் தீர்மானங்கள் மூலியமாகச் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோமென்றும், 1914ம் வருஷத்திய கோயமுத்தூர் ஜில்லா கான்பரன்ஸிலும்கூட ஒருதீர்மானம்,இதைபற்றி ஸ்ரீமான். பி. வி. நரசிம்ம ஐயரால் பிரேரேபிக்கப்பட்டு தீர்மானமாயிருப்பது தமக்கு ஞாபகமிருக்கின்றதென்றும், ஜஸ்டிஸ் கட்சியார் இந்தசட்டத்தைச் செய்தார்களென்கிற காரணத்திற்காக அதைச்சிலர் தூற்றுவதற்கு நாம் காதுகொடுப்பது பைத்தியக்காரத்தனமென்றும், நமது மதம் தற்காலம் சிரிப்புக்கிடமாய் கோர்ட்டுகளில் தொங்கிக்கொண்டிருக்கின்றதென்றும், யானையின் பின் தொடையில் போடுகிற நாமம், வடகலையா,தென்கலையா வென்பது ஓர் வெள்ளைகார அதிகாரி சொன்னால்த்தான் நமது மனம் திருப்தியடைகின்றதென்றும், இன்னும் பலமுக்கியமான விஷயங்களுக்கு சர்க்கார் பிரவேசத்தையும் எதிர்பாராமலிருப்பதற்கு நமக்கு யோக்கியதை இல்லை என்பதை நிமை காட்டிக்கொண்டிருக்கிறோமென்றும், இந்து மதத்தில் ஒரு இந்து பொதுத்தெருவில் நடப்பதற்குச் சர்க்கார் தயவிருந்தாலுங்கூட நம்மவரே செய்யும் சூட்சிகளால் முடியாமலிருப்பதோடு, இன்னும் பல கெடுதிகள் நம்மவரே செய்கிறார்கள் என்றும் இம்மாதிரியான ஜனங்களிடையில் வாழவேண்டுமானால் சர்க்கார் சட்டமில்லாமல் எப்படி வாழமுடியுமென்றும், மதத்தின் பேரால் வசூல் செய்யப்படுகிற கோடிக்கணக்கான ரூபாய்களை சரிவரச்செலவழிப்பதற்குக் கணக்குக்கேட்காமலிருக்கக்கூடிய அவ்வளவு யோக்கியர்களாக நாம் நமது மடாதிபதிகளையும், மகந்துக்களையும், பூஜாரிகளையும், அடைய தகுந்த யோக்கியதைக்கு வந்துவிட்டோமா வென்றும், நமது மதத்தைப்பற்றி நமக்கு என்ன ஞானமிருக்கின்றதென்றும், "சுவாமி ஏன் பன்றி அவதாரமெடுத்தார்? உலகத்தைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டு ஒரு இராக்ஷசன் சமுத்திரத்துக்குள் ஒளிந்துகொண்டான், அதைப் பிடுங்கிக்கொண்டுவரத்தான் பன்றி அவதாரம் எடுக்கப்பட்டதென்று"சொன்னால்,"அப்போது தண்ணீர் எதன் மேலிருந்தது" என்று கேட்கும் புறமதஸ்தர்களுக்குப் பதில்சொல்லத் தெரியாமல் விழித்து, நமது மதத்தை இழந்து, அன்னிய மதத்துக்குப் போய்ச்சேரும் பாமரர்களைத் தடுக்கத் தகுந்த மதக்கல்விக்காவது, நமது பணத்தை ஆயிரம், பதினாயிரமாகக் கொள்ளையடித்து காலைக்கழுவிபாத திர்த்தமென ஒரு உத்ரணித் தண்ணீரைக் கொடுத்து சோம்பேறிகளுக்குப் பொங்கிப் போட்டுக் கொண்டும், தங்கப்பல்லக்கில் சவாரி செய்து கொண்டும், தாசிவேசிகளை வைத்துக் கொண்டும், மற்றும் கூடா ஒழுக்கத்தில் திரியும் நமது மடாதிபதிகளென்போரும், மற்றோரும் இதுவரை என்னவழி செய்திருக்கிறார்கள் என்றும், இவற்றை யெல்லாம் நினைக்கும்போது இப்போதுள்ள தேவஸ்தானச் சட்டம் கூட போதாதென்றே சொல்லி முடித்தார். பிறகு, அக்ராசனரால் முடிவுரை சொல்லப்பட்டுக் கூட்டம் கலைந்ததும்,

அக்ராசனருக்கும், உபன்யாசகருக்கும் வந்தனம் சொல்லப்போவதாய் கோயமுத்தூர் டவுன் காங்கிரஸ் காரியதரிசியென்றமுறையால், ஒரு பிராமணர் எழுந்து தன்னைக் கேட்காமல் இக்கூட்டம்கூட்டியதென்றபோதிலும், அதைத்தான் ஒப்புக்கொள்ளுவதாகவும்,ஸ்ரீமான்.நாயக்கர் நிர்மாணத்திட்டத்தைப்பற்றி வெகுஅற்புதமாகச்சொன்னாரென்றும், ஆனால், காங்கிரசில் சேராதீர்களென்று சொன்னதை மாத்திரம் தான் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் பத்திரிக்கை நிருபர்களைப் பார்த்துச் சொன்னார். உடனே அங்கிருந்த ஜனங்களெல்லாம் அவரை, "நீர் சொன்னது தப்பு, ஸ்ரீமான். நாயக்கர் சொல்லாத பொய்யான வார்த்தையைச் சொல்லி பத்திரிக்கையில் ஸ்ரீமான். நாயக்கருக்கு விரோதமான பிரசாரம் செய்வதற்கு அநுகூலமாகப் பிராமணத் தந்திரம் செய்திருக்கிறீர்; ஸ்ரீமான். நாயக்கருக்கு வந்தனங்கூறுவதாகச் சொல்லி தந்திரமாக மேடையில் ஏறிக்கொண்டு இம்மாதிரி பொய்யான சங்கதிகளைப் பேசுவது மிகவும் ஒழுங்கீனமென்றும், காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு திரியும் பிராமணர்கள் யோக்கியதையே இப்படியிருக்குமானால், மற்றவர்கள் சங்கதி எப்படியிருக்குமென்றும்" சொன்னார்கள். பிறகு அந்த பிராமணர், தனக்கு அந்தமாதிரிபட்டதாக நினைத்து, அவ்விதம் சொன்னேன் என்று சொல்லிக்கொண்டார். உடனே அக்ராசனர் பொது ஜனங்களை அமர்த்தி, கூட்டத்தைக்கலைத்தார். பிறகு,ஷை பிராமணர் ஸ்ரீமான்.நாயக்கரிடம் வெளியில் வரும்போது சமாதானம் சொல்லிக்கொள்ளுவதற்காகப் பேச வந்தார். ஸ்ரீமான். நாயக்கர் உங்கள் சமாதானத்தைப்பற்றி எனக்கு அக்கரையில்லை, கூட்டத்தில் அம்மாதிரி பேசிவிட்டு, தனியாக இங்குவந்து என்னிடம் பல்லைக்கெஞ்சுவதில் என்ன பிரயோஜனம்? ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்தவுடனேயே இவ்வளவு விஷமம் செய்துவிட்டீர்களே, பெரியயோக்யதை கிடைத்தால் பிராமணரல்லாதார்களை அடியோடு ஆலையில் வைத்தல்லவா நசுக்கி விடுவீர்கள்; என்று சொன்னார். உடனே அந்த பிராமணர் தனக்குக் காங்கிரசிலிருக்கும் சம்பந்தத்தை ராஜீனாமாச் செய்வதாக த்தீர்மானம் செய்து, ராஜீனாமாக் கடிதத்தை எழுதி ஜோப்பில் போட்டுக்கொண்டு தான் உங்கள் கூட்டத்திற்கு வந்தேனென்று சொல்லி அக்கடிதத்தை எடுத்துக் காட்டினார். பக்கத்திலிருந்தவர்கள், "மீட்டிங்குக்கு வரும்போதே இம்மாதிரி கலகம் செய்யலாம், அங்கிருக்கிறவர்கள் ஏதாவது சொன்னால், உடனே ராஜீநாமாக் கொடுத்து விடுவதாய்ச் சொல்லிவிடலாமென நினைத்து ராஜீநாமா எழுதி ஜோப்பில் போட்டுக்கொண்டு, கலகத்திற்குத் தயாராக வந்திருக்கிறீர் என்பது இந்த ராஜீநாமாவால் ருஜுவாகிறதா இல்லையா" வென்று கேட்டார்கள்.

பிறகு அந்தப்பிராமணர் வெட்கி தலை குனிந்துகொண்டு பேசாமற்போய்விட்டார். கூட்டத்திலிருந்தவர்களுக்கு தேசிய பிராமணர்கள் சூழ்ச்சியின் முறை நன்றாய் விளங்கிற்று.

இப்படியிருக்க, சுதேசமித்திரன் என்னும் பிராமணப்பத்திரிகை ஸ்ரீமான். நாயக்கர் பேசியதுபற்றி சரியாய் எழுதாமலும், நடந்த வர்த்தமானங்களைப்பற்றி சரியாய்க் குறிப்பிடாமலும், ஸ்ரீமான். நாயக்கர்பேரில் பழிசுமத்தி எழுதியிருக்கிறது. பிராமணப் பத்திரிகைகளின் வல்லமைகளை அறிவதற்கும், ஆக்கவும், அழிக்கவும் கூடியசக்திகள் அவைகளுக்குண்டென்பதைக் காட்டவும் இந்த உதாரணமே போதுமானதா? இல்லையாவென்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## மதிப்புரை.

### தேசபந்து.

"தேசபந்து" என்னும் பெயருடைய வாரப்பத்திரிக்கை யொன்று தூத்துக்குடியினின்று வரப்பெற்றோம். இது புதன்கிழமைதோறும் வெளியாகிறது. தேசீய வழிநின்று நமது நாட்டுமக்களின் முன்னேற்றத்துக்கென உழைப்பதுவே தன்கடமையென அதன் ஆசிரியர் முதல் இதழில் கூறியுள்ளார். திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் தேசீய பத்திரிகை இல்லையே என நாம் எண்ணியதுண்டு. இப்போது தேசபந்து பத்திரிகை வெளியாகியிருப்பதைக் காண சந்தோஷிக்கிறோம். வருடசந்தா ரூ. 6

### வைத்திய சந்திரிகா

இப்பெயர் கொண்ட வைத்திய சஞ்சிகையொன்று, கரூரிலிருந்து நமக்கு வருகின்றது. இதன் ஆசிரியர் பண்டித, நாராயண ஐயங்காராகும். இலகுவில், நோயைத்தீர்த்துக்கொள்ளும் முறைகளை நன்கு இதில் விளக்கியிருக்கிறது. 3—வது இதழில் காய்ச்சல், வியாதியைப்பற்றி எழுதியிருக்கும் முறையும், மருந்தும் போற்றத்தக்கது. வருடசந்தா ரூ. 2. தான்.

### ஜம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரம்.

இந்தியாவின் ராபின்ஹூட் என அழைக்கப்பட்ட, தென்னாட்டு ஜம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரப் புத்தகமொன்று வரப்பெற்றோம். இதனை எழுதியவர், அருப்புக்கோட்டை "நாடார் குலமித்திரன்" ஆசிரியர். ஸ்ரீமான். முத்து நாடாராகும். தென்னாட்டில், ஜம்புலிங்க நாடார் ஏன் தீய தொழிலில் பிரவேசித்தாரென்றும், அக்காலத்திலும் எங்ஙனம் நடந்து கொண்டாரென்றும், அவருடைய முடிவைப் பற்றியும், ஸ்ரீமான். முத்து நாடார் விரிவாக இதில் எழுதியிருப்பது பாராட்டத் தக்கது. இதன் விலை ரூ. 1.

# ஓர் எச்சரிக்கை.

"தமிழ் நாடு" பத்திரிக்கை தனது 20-12-25 ந் தேதி தலையங்கத்தில் "ஓர் எச்சரிக்கை" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருப்பதின் சுருக்கமாவது:—

**சு**தந்தரம் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகும். சுதந்தரமென்பது ராஜீய சுதந்தரத்தை மட்டும் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறான எண்ணமாகும். சமய சுதந்தரம், சமூக சுதந்தரம், சிறு கூட்டத்தார் தம்முடைய நயவஞ்சகத்தால் பெரும்பான்மையோரை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்துவதுபோன்ற மோசங்களிலிருந்து குடிமக்கள் விடுதலை பெறும் சுதந்தரம், ஆகிய பல சுதந்தரங்களும் உண்டு. நாம் கோருவது பரிபூர்ண சுதந்தரமாகும். ராஜீய—சமய—சமூக விடுதலையே, நாம் வேண்டுகிறோம். வெள்ளைக்காரனுக்கு குறிப்பிட்ட விசேஷ—சுதந்தரமும், அந்தஸ்தும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. சமய-சமூக- உயர்வும் மற்றவர்களுக்கில்லாத "பிறப்புரிமை" என்னப்பட்ட பாத்தியதைகளும் பிராமணருக்கு கொடுக்கப்படுவதையும் நாம் ஆட்சேபிக்கிறோம். யாவரும் ஒன்றே. ஆப்பிரிக்கா, அமெரிக்கா, பிஜி, கெனியா போன்ற இடங்களில் வெள்ளையர்கள் இந்தியர்களை மிலேச்சர்களைப்போல் நடத்துவதைப்பற்றி நமக்கு எப்படி கொதிப்பு உண்டாகிறதோ, அதைவிட பதின்மடங்கு அதிகமான கொதிப்பு இந்நாட்டில் உயர்ந்த ஜாதியார் என்ற அகம்பாவம் கொண்ட பிராமணர்கள், மற்றவர்களை இழிவாக நடத்துவதினால் நமக்கு உண்டாகிறது. கல்பாத்தி பிராமணர், தெருவில் "தாழ்ந்த ஜாதியார்" நடக்கக் கூடாதென்று செய்துவரும் அட்டகாசம் உலகமறிந்த விஷயமாகும். கல்பாத்தி ரஸ்தா பொது ரஸ்தா; பொதுப் பணத்தால் போடப்பட்டது, யாவருக்கும் அதில் நடக்க உரிமையுண்டு, பிராமணர்கள் அதைத் தடுப்பது அநீதியாகும். சமீபத்தில் நடந்த ரதோற்சவத்தில், பிராமணச் சேரிவழியாக ஈழுவர்கள் செல்லக்கூடாதென்று சர்க்கார் தடுத்திருந்தார்கள். அதற்குச் சர்க்காரின் சட்டமெம்பர் மனு ஸ்ரீமான். சி. பி. ராமசாமி ஐயர் கூறும் சமாதானம் வேடிக்கையாகவிருக்கிறது. ஈழுவர்களுக்கு அந்த ரஸ்தாவில் செல்லப் பாத்தியதையுண்டு. ஆனால், கலகம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டே தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்று ஸர். ராமசாமி கூறுகிறார். நியாயமாகச் செல்லும் இவர்களை அநீதமாக பிராமணர்கள் தடுத்து கலகம் விளைவிப்பார்களானால், பிராமணர்களைக் கைது செய்திருக்கவேண்டும். அல்லது ஆயுதம் தாங்கின போலீஸ் பாராவை பிராமணச் சேரியில் நிறுத்தி சமாதானத்தை நிலைநிறுத்தியிருக்கவேண்டும். "பகைவனைப் பஞ்சாங்கம் கேட்டால், மத்தியானம் மரணம் என்பான்" என்றதுபோல், ஸ்ரீமான். ராமசாமி ஐயர் தம்முடைய பிராமணியத்தை இதில் காட்டிவிட்டாரென்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

வெகுநாட்களாக "பிராமணச் சபை"யைக் கண்டித்து நாம் எழுதிவருகிறோம். பிராமணருடைய அநீதமான ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே "பிராமணச்சபை"யும் வர்ணாசிரமதர்ம மகாநாடுகளும் நாட்டில் ஏற்பட்டிருப்பதாக பல தடவைகளில் நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அப்படியிருக்க, எல்லாப் பிராமணர்களும் "பிராமணர்சபை"யில் சேரவேண்டுமென்றும், அதை ஆதரிக்கவேண்டுமென்றும், சட்ட மெம்பர்-ஸர். ராமசாமி ஐயர் கூறியதாக பத்திரிகையில் விஷயம் வெளிவந்திருக்கிறது. ஸர். அய்யர் உடனே தம்முடைய சர்க்கார் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டு வைதிக பிராமண வேடந்தரித்து, பிராமணீயக்கத்தை நடத்த கிளம்பியிருப்பாரானால், அவர் கூறியதை நாம் பாராட்டியிருப்போம். ஆனால், இதில் அடங்கிக்கிடக்கும் விஷயத்தை பிராமணரல்லாதார் அறிதல் வேண்டும். பிராமணத்தலைவர்கள் சமீபத்தில் சென்னையில் ஓர் ரகசியக் கூட்டம் நடத்தியதாகவும், அதில் பிராமணரல்லாதார் இயக்கத்தை நசுக்கிவிடவேண்டுமென்றும், சர்வ கட்சி பிராமணரும் ஒன்று சேர வேண்டுமென்றும், சட்ட மெம்பர் ஸர். சி. பி. ராமசாமி ஐயரை எந்த பிராமணப் பத்திரிகையும் தாக்கி எழுதக் கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டதாக நாம் அறிகிறோம். ஸ்ரீமான். ராமசாமி ஐயர் பிராமண சபையை ஆதரிப்பதிலிருந்து, ஸ்ரீமான் ராமசாமி ஐயருக்கு கடைசி காலத்தில் ஆபத்தான இந்த பிராமணீய பித்து ஏற்பட்டு விட்டதே என்ற கவலைதான் நம்மை வருத்துகிறது. ஸ்ரீமான். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் "நவசக்தி" பத்திரிகையைத் தமது வசமாக்கிக்கொண்டு பிராமணரல்லாதார் இயக்கத்தை நாலாவழியிலும் தாக்கி, அப்பத்திரிக்கையில் எழுதியிருந்ததையும், அதற்கு ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் "குடி அரசு" பத்திரிக்கையில் எழுதியிருந்த ஆணித்தரமான பதிலையும் சென்றவாரம் "தமிழ் நாட்டில்" நண்பர்கள் பார்த்திருக்கலாம். சென்னை சட்டசபையில் ஸ்ரீமான் வீரையன் கொண்டு வந்த மசோதாவை பிராமணர்கள் எதிர்த்துப்பேசிய போது, ஸ்ரீமான். நரசிம்மாச்சார்லு என்ற பிராமண மெம்பர் சொன்னதில் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. "இன்று ரஸ்தாவில் நடக்கவேண்டுமென்று கேட்பார்கள். நாளை ஆலயப்பிரவேசம் வேண்டுமென்றும், பிறகு கலப்பு விவாகம் வேண்டுமென்றும் கேட்பார்கள். அதனால் இரத்தக்களம் ஏற்படுமென்றும்" பேசினார், என்று அறிகிறோம். இது உண்மையானால், ஸ்ரீமான். நரசிம்ம ஆச்சார்லுக்கு பித்தம் தலைக்கேறிவிட்டதென்றே கூறவேண்டும். ரஸ்தாவில் நடக்கவேண்டும்; சகல ஹிந்து பக்த கோடிகளுக்கும் சமத்துவமான ஆலயப் பிரவேசம் வேண்டும்; இதுதான் தீண்டாமை ஒழிப்பதின் நோக்கமாகும். இரத்தம் சிந்தும்படியான நிலைமையை பிராமணர்கள் உண்டு பண்ணினால், அதற்குப்பயந்து பிராமணரல்லாதார் ஓடிப்போக மாட்டார்கள் என்பதை ஸ்ரீ நரசிம்மாச்சார்லு அறிந்திருக்கட்டும். கலப்பு விவாகம் செய்து கொள்ளும் விஷயத்திற்கும், பொது ரஸ்தாவில் நடப்பதற்கும் சம்பந்தமில்லை. இஷ்டப்பட்டவர்கள் கலப்பு விவாகம் செய்து கொள்வார்கள். அதற்கு ஸ்ரீ நரசிம்மாச்சாரி தாதா அல்ல. சடங்குப்படி கலப்பு விவாகமில்லாவிட்டாலும் காதல் கலப்பு விவாகம் இந்நாடு முழுதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படிக்கில்லையென்று யாராவது தம்நெஞ்சில் கை வைத்துக் கூறமுடியுமா? காதல் விஷயத்தில், ஜாதிபேதமற்று அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் பற்பல வகுப்புப்பெண்களும், ஆண்களும் சதிபதிகளாக வாழ்ந்து வருவதை யாவரும் அறிவார். அதைத்தடுப்போரில்லை; தடுக்கவும் முடியாது. இது தம்பதிகளின் பிரீதியை பொறுத்தது. கலப்பு விவாகத்திற்கும் ரஸ்தாவில் நடப்பதற்கும் முடிபோட்டுப் பார்ப்பது அறிவாளிகள் செய்கையன்று. பிராமணர்கள், தங்களுடைய பூர்வீக உயர் பதவிகளையும், பாத்தியதைகளும் நிலைநிறுத்திக் கொள்ள இப்படிக்கட்டுப்பாடாக வேலைசெய்ய ஆரம்பித்திருப்பதைப்பார்த்து மிகவும் அழுத்தமாகக் கண்டிக்கிறோம். பிராமணீயக்கம் பலப்பட்டால், பிராமணரல்லாதாரியக்கமும் ஆயிர மடங்கு அதிகமாய் பலத்து விடுமென்பதையும், அறிந்து நடக்கும்படி பிராமணத் தலைவர்களை எச்சரிக்கிறோம்.

# ஈரோட்டில் ஸர். தியாகராயர் திருநாள் கொண்டாட்டம்.

(நமது நிருபரிடமிருந்து)

பிராமணரல்லாத தலைவர்களின் வேண்டுகோள் பிரகாரம், டிசம்பர் மாதம் 18-ந்தேதியன்று ஈரோட்டில் ஸர். தியகராயரின் திருநாள் கொண்டாடப்பட்டது. அன்றுமாலை அலிசவுக்கில், பிராமணரல்லாத வகுப்பைச் சேர்ந்தவர்களாகிய, இந்துக்கள், முகமதியர், கிறிஸ்தவர்கள், ஆதிதிராவிடர் முதலிய பலரும் விஜயம் செய்திருந்தார்கள். கூட்ட ஆரம்பத்தில் தேசிய தொண்டரொருவர் தேசிய கீதங்களைப் பாடினார். பின்னர், ஸ்ரீமான். ச. தாமஸ் பாலையா பிள்ளை, அம்மகாநாடு கூடிய தன் அவசியத்தைப் பற்றியும், காலஞ்சென்ற பெரியார், ஸர். தியாகராய செட்டியார், பிராமணரல்லாதாருக்காகச் செய்த அருமையான வேலைகளையும், அவருடைய மகத்தான சுயநல தியாகத்தையும் பாராட்டிப்பேசியதுடன், இத்தகைய பெரியாரைப் பிராமணரல்லாதார் என்றும் மறத்தலாகாது என வற்புறுத்திப்பேசினார். பின்னர் ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் காலஞ்சென்ற தியாகராயரின் பல குணாதிசயங்களை சவிஸ்தாரமாக எடுத்துக்கூறியதுடன், பிராமணரல்லாதார், அவர் விட்டுப்போயுள்ள வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும், வருடந்தோறும் இப்படியே அவர் திருநாளை எங்கும் கொண்டாட வேண்டுமென்றும், பேசியதுடன், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தின் அருமையைப்பற்றியும் சுருக்கமாய்க்கூறினார். பின்னர் மகாநாடு இரவு 9 மணிக்கு கலைந்தது.

# பூணூல்.

பூணூல் இந்தியாவில் வகுப்பு வித்தியாசங்களைக்காட்டும் பல அறிகுறிகளில், ஒன்றாய்விளங்குவது. இது பூணு-நூல் என்கிற இருபதம் சேர்ந்தது. இது மக்களுக்குப்பிறக்கும்போதே வித்தியாசத்தைக் காட்டக்கூடிய ஓர் அடையாளமாக உடன்பிறந்ததல்ல. ஆனால், மனிதர்கள் ஒரு பக்குவ நிலையை அடைந்ததாகக் காட்டுவதற்கு உபயோகப்படுவதாய்ச் சொல்லப்படும் அறிகுறியாய் விளங்குகிறது. எப்படி தாழ்ந்த ஜாதியில் ஒரு குழந்தை பிறக்கிறபோது, பரிசுத்தமாகப்பிறந்து, பிறகு வளர வளர சரிவர குளியாததினாலும், அழுக்கான உடைகளை உடுத்திக்கொள்ளுவதினாலும், அதுவும் தீண்டாத வகுப்பென்று சொல்லப்பட்டுப் போய்விடுகிறதோ, அதுபோலவே பார்ப்பனக் குழந்தைகளும், சாதாரணக் குழந்தைகள் போலவே பிறந்து கொஞ்சக்காலமான பிறகு அது ஓர் பூணூலைப் போட்டுக்கொண்டவுடன், அது உயர்ந்த ஜாதிஎன்று சொல்லப்படும் தத்துவத்தை அடைந்துவிடுகிறது. ஆனால், தாழ்ந்த ஜாதியாரென்னப்படுவோர் தவிர, மற்றோர்கள் வீட்டில் இம்மாதிரி ஓர் குழந்தை பிறந்து அது நாளாக ஆக, அழுக்காகிச் சரிவரக்குளிப்பாட்டாமலும்' அழுக்காடைகளைத் தரித்துக்கொண்டும் இருக்கிறபோது, அது தாழ்ந்த ஜாதி தத்துவத்தை அடைகிறதில்லை. அது போலவே, பிரமணர் தவிரமற்ற குழந்தைகள் பரிசுத்தமாகப் பிறந்து பக்குவ வயதில் பூணூலை அணிந்தாலும், ஓர் பக்குவநிலை ஏற்பட்டுக் கொண்டாலும், அவர்கள் உயர்ந்த ஜாதித்தத்துவத்தை அடைவதில்லை. பிராமணரல்லாதாரில் எத்தனையோபெயர் இப்பொழுதும் பூணூல் போட்டுக்கொண்டிருந்தாலும், அவர்களெல்லாம் சூத்திரர்,சண்டாளர் என்கிற தத்துவப்படிதான், கருதப்படுகிறார்கள். இதை இன்றையத்தினமும் பார்த்து வருகிறோம். ஆனால், அழுக்காயிருப்பவன் மனப்பான்மையில், தான் கொஞ்சம் அழுக்குள்ளவனாயிருக்கிறேனென்று எப்படிக் கருதுகிறானோ, அதுபோல் பூணூல் போட்டுக்கொள்ளுகிறவன், தனது மனப்பான்மையில் தான் கொஞ்சம் உயர்ந்த ஜாதியென்பதாகக் கருதிக்கொள்ளுகிறான். அது மாத்திரமல்லாமல் மற்றவர்கள் தாழ்ந்த ஜாதி யென்றும் கருதுகிறான். ஆனால், இவ்விரண்டும் அநுபவத்துக்கு ஒத்துக் கொள்ளப்படுறதில்லை. பிராமணனாய் இருக்கிறவன் பூணூல் போட்டுக்கொண்டாலும், போட்டுக்கொள்ளாவிட்டாலும் உயர்ந்தவனென்று, தனக்குள் ஒரு எண்ணமும், தாழ்ந்த ஜாதியானென்பவன் அழுக்குடை தரித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் தாழ்ந்தவனென்கிற எண்ணமும் ரத்தத்தில் பாவியிருக்கிறது. இந்த நிலையில், ஸ்வாமி. சிரத்தானந்தர், லாலாலஜபதிராய் போன்ற பெரியோர்கள், தீண்டாதாரை சமநிலைக்குக் கொண்டுவர ஆரிய சமாஜம் ஓர் சாதனமென்றும், 'அதன் தத்துவம் பூணூல் போட்டுக்கொண்டு ஏதோ சில சமஸ்கிருத வார்த்தைகளை ஜபிப்பது தானென்றும் ஏற்பாடு செய்து கொண்டு, பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தப் பூணூல் போட்டுக் கொள்ளுவதால், மனிதனின் தாழ்ந்தநிலை எப்படி உயர்த்தப்பட்டுப் போகும்? பூணூல்போட்டுக் கொண்டிருக்கிற பிராமணரல்லாதார் எல்லோருக்கும், பிராமணருக்குள்ளசமத்வம் இருக்கிறதா? இப்பொழுது நமது தேசத்தில் சிங்குராவு, செட்டியார், ஆசாரியார், குயவர், வன்னியர், சௌராஷ்டிரர், தேவாங்கர். கோமுட்டி செட்டியார், ராஜு வாணிபர், பண்டாரம், நாயக்கரில் சில பிரிவார், இன்னும் பஞ்சமரென்று சொல்லப்படுவோரிலும், வள்ளுவர் என்னும் வகுப்பார், ஆகிய இவ்வளவு பெயர்கள் சொல்லப்படும் பிராமணரல்லாத சகோதரர்கள் பூணூல் போட்டுக்கொண்டு தானிருக்கிறார்கள். பிராமணர்களுக்குச் சமமான இடம் இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா? பிராமணர்களென்று சொல்லிக்கொள்ளுவோரிலேயே, சந்தியாவந்தனத்திலும், பூணூலிலும் அர்த்தமில்லையென்றும், அதில் நம்பிக்கையில்லாத பல நண்பர்கள், பூணூலையும் அறுத்தெறிந்துவிட்டும் இருக்கிறார்கள். சிலர் பூணூலை மாத்திரம் போட்டுக்கொண்டு மற்றும் அதற்கென்று ஏற்பட்ட கருமங்களைச்செய்யாதிருக்கிறார்கள். பிராமணர்களும் மற்றவர்களும் அவர்களைப் பிராமணர்கள் என்று தான் சொல்லுகிறார்கள். இப்படியிருக்க சமத்வமடைவதற்கு பூணூலைப்போட்டுக்கொள்ளவேண்டுமென்று, ஸ்ரீமான். வ. வெ. சு. ஐயர் போன்ற சிலபிராமண சமாஜத்தாரும், ஸ்வாமி சிரத்தானந்தா லாலா லஜபதி போன்ற, ஆரிய சமாஜத்தாரும், பிராமணனுடைய சமத்வத்தை அடைவதற்குப் பூணூலைப்போட்டுக்கொள்ளவேண்டும்;என்று சொல்லுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? ஆரியர் தான் பார்ப்பனர், பார்ப்பனர் தான் ஆரியர் என்று நமது நிகண்டு, அகராதி, திவாகரம் போன்றவைகள்கூறுகின்றன. ஆகையால், இந்தப்பூணூல் போடவேண்டுமென்கிறவிஷயத்தில் பார்ப்பனருக்கும்,லஜபதிராய் போன்ற ஆரியசமாஜத்தாருக்கும் கருத்து ஒன்றேதான். இதனால் நம்நாட்டுக்கு என்னபயன் ஏற்படுமென்றால்,பிராமணரல்லாதாரில் பூணூல் இல்லாதாரில் சிலர் தங்களுக்குள் இருக்கும் சமத்வ தன்மையைப் பிரித்து வைக்க உதவும். ஒரு மனிதன் பூணூல் போட்டுக்கொண்டாலே தன்னை மற்றவன் உயர்ந்தவனென்று சொல்லுகிறானா? இல்லையா? வென்ற கவலையே இல்லாமல், மற்றவர்களைவிடதான் உயர்ந்தவன் என்கிற எண்ணம் மாத்திரம் வந்து விடுகிறது. நாம் மேலே காட்டியுள்ள பூணூல் போட்டுள்ள வகுப்பார்கள், மற்ற பூணூல் போட்ட ஒரு வகுப்புக்கொருவகுப்பு சமமென்று கருதுகிறார்களா? ஆதலால் இந்தப் பூணூல் போடுவதென்பது இன்னும் கொஞ்சம் ஜாதிகளைப் பிரித்து ஒருவனுக்கொருவன் தீண்டாதவனென்று சொல்லிக்கொள்ளத்தான் உதவும். அல்லாமலும், கிறிஸ்தவ,முகமதிய முதலிய மதங்களுக்கு மதம் மாற்றப்படுவதுபோல் பிராமண மதத்திற்கும் சிலர் மாற்றப்பட்டு பிராமண மதம் வலுத்து நமக்கு இன்னும் கொஞ்சம் கொடுமைகளை அதிகமாகச் செய்யத்தான் உதவும். பூணூல் போட்டுக்கொள்ளுகிற சமாஜத்தின் தத்துவங்கள் பல ஒழுங்கானதாய்க் காணப்படலாம். அது அமுலுக்கு வரக்கூடுமா? அப்படியானால், அதைவிடப் பல யோக்கியமான தத்துவங்கள் வருணாச்சிரம தர்மிகளென்று சொல்லக்கூடிய பூணூல் போட்டுக்கொண்ட பார்ப்பனர்கள் கொள்கையிலுமிருக்கிறது. அவர்கள் அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறார்களா? எவ்வளவு அயோக்கியர்களும், விபசாரிகளும், குஷ்டரோகிகளும் இன்றையத்தினம் பார்ப்பனர்களாகவே துலங்குவதைப் பார்க்கிறோமா? இல்லையா? அதுபோலவே இதுவும் ஆகாதென்பதற்கு என்ன நம்பிக்கை? இதற்கு முன்னும், நமது நாட்டில் சமத்வம் ஏற்படுத்துவதற்காக, ஸ்ரீ ராமாநுஜர் போன்ற பல பெரியார்கள் தோன்றி, அநேக தாழ்ந்த ஜாதியாரென்னப்படுவோர், அநேகருக்கு பூணூல் முதலியவைகளைப்போட்டு, பல சடங்குகள் செய்து உயர்த்தோராக்கினர். அதில் தந்திரத்திலும், சூழ்ச்சியிலும், வலுத்தவர்கள் பிராமணர்களாகி அதற்கு முன்னிருந்த பிராமணர்களைவிட மோசமாய், இன்றையத்தினம் நமது சமூகத்துக்கும், நாட்டுக்குமே எமனாய்த் தோன்றி இருப்பதைப் பார்க்கிறோம். சக்தியற்றவர்கள் பூணூல் போட்டும் பழையபடியே இருக்கிறார்கள். பூணூலினால் என்ன சமநிலை ஏற்பட்டு விட்டது? கோடிக்கணக்கான பூணூல் இல்லாத ஜனங்களிருக்கிற நாட்டில், அந்த ஜனங்கள் சமத்வம் பெறவேண்டுமானால்-தெருவில் நடக்கவேண்டுமானால்— அவர்கள் தெய்வத்தைத்தரிசிக்க வேண்டுமானால்— வெகு சொற்பமாயிருக்கிற ஜனங்களைப்போல், வேஷம்போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் இது யோக்கியமாகுமா? நமது தமிழ் நாட்டில், நமக்குப் பூணூல் இருந்தது தான் ஆதியில் நாம், தெருவில் உலாவினோமா? கடவுளைத்தரிசித்தோமா? நமது எதிரிகளால் மத்தியில் தோன்றின நமது அழிவுக்கேற்பட்ட சில அக்கிரமங்கள் இன்றையத்தினமும் நம்மை அது வாட்டுகிறது. இந்தியாவிலுள்ள இந்துக்களென்போர் மாத்திரமே சமத்வம் அடையவேண்டுமானால் இன்னும் 23 கோடிப்பேர் பூணூல் போட்டுக்கொள்ளவேண்டும்! மகமதியரும், கிறிஸ்தவரும் சமத்வம் அடையவேண்டுமானால் அதில் 8 கோடிப்பேர் பூணூல்போட்டுக்கொள்ளவேண்டியது! அப்படியில்லாவிட்டால், பூணூல் போட்டுக்கொண்டவர்கள் தவிர, மற்றவர்களைத்தாழ்ந்தவர்களென்று கருதிக்கொண்டு மிலேச்சர்களென்றும் கூப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டும்! நமது நாட்டுக்கு இதைப் போல கேடு சூழ்வதான காரியம் வேறொன்று மில்லையென்பதுதான் நமது அபிப்ராயம். இதிலிருந்து நமக்கு என்னவிளங்குகிறதென்றால், இந்தியாவின் முன்னேற்றத்துக்கு, எப்படி தீண்டாமை ஒழிய வேண்டியது முக்கியமோ, அதுபோலவே இந்த பூணூல் தத்துவமும் ஒழியவேண்டியது அதைவிட முக்கியமானதாகும்.

ஒரு மூட்டை அரிசியில், ஒரு படி கல்லிருந்தால் கீழே கொட்டி, அதிலுள்ள ஒரு படி கல்லைப் பொறுக்கி எறிவது சுலபமா? அல்லது, கல்லை விட்டுவிட்டு ஒரு மூட்டை அரிசியையும் பொறுக்கிக்கொண்டிருப்பது சுலபமா? என்பதைக் கவனிக்க வேண்டுமாய் விரும்புகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

குரோதன-௵ மார்கழி-மீ கூ-உ

## ஒத்துழையாமையே மருந்து.

ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரியாரவர்கள், நிர்மாணத்திட்டத்தில் ஒன்றாகிய மதுவிலக்குக்கு சட்டசபையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம், என்கிற நிலைக்கு வந்திருப்பதாக, அவர் பல பத்திரிக்கைகளுக்கு அநுப்பியிருக்கும் கட்டுரைகளிலிருந்து வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். அத்தோடு, தீண்டாமை ஒழிப்பதற்கும், கோர்ட்டுகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம், என்பதாகக் கருதியிருப்பதாய் அவர் சென்ற சில தினங்களுக்கு முன் சித்தூர் ஜில்லா, சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஓர் ஆதிதிராவிட ஆலயப்பிரவேச வழக்கில் ஆஜராகி ஜெயம் பெற்றதன் மூலமாகவும் அறியலாம். இனி, மகாத்மாவின் மூவகைப் பகிஷ்காரத்தில் முக்கியமாயுள்ளது, சர்க்கார் சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடாதென்பதுதான். ஆனால், அது அநுபவத்தில் இப்பொழுது அடியோடு இல்லவேயில்லை. அதில் இப்போது நம்பிக்கை வரவேண்டிய அவசியமும் இல்லை. கோர்ட்டு, சட்டசபை ஆகிய இவ்விரண்டிலும், ஸ்ரீமான். ஆச்சாரியார் அவர்களுக்கு நம்பிக்கை வந்திருப்பது தற்கால நிலைமையில், அதிசயமுமல்ல; அது ஓர் வகையில் குற்றமுமல்லவென்றே சொல்லுவோம். ஆனால், காரியத்தில் இவையிரண்டும் தேசிய சம்பந்தமான விஷயங்களுக்கு பயன்படுமா, என்பது தான் நமது கவலை. ஸ்ரீமான். சி. ஆர். தாஸ் அவர்கள், சட்டசபையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம், என்ற காலத்தில், சட்டசபையால் தேசத்திற்கு ஒன்றும் செய்யமுடியாது, என்று மனப்பூர்வமாய் நம்பித்தான் நாம் ஆக்ஷேபித்தோமேயல்லாமல், மற்றப்படி; ஸ்ரீமான். தாஸ் முயற்சிக்கு விரோதமாய் இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடல்ல. அதுபோலவே, தேசத்துக்காகத் தொண்டு செய்த நிரபராதிகளை நமது சர்க்காரார் வேண்டுமென்றே, கூட்டங் கூட்டமாய்ப்பிடித்துத் தண்டித்து ஜெயிலிலடைத்த காலத்தில், அவர்கள் எதிர் வழக்காடும்படி அறிவுறுத்திய போதும், சர்க்கார் கோர்ட்டுகளில் தேசிய சம்பந்தமான வழக்குகளுக்கு நியாயங் கிடைக்காதென்கிற உறுதியின் பேரில் தான், நாம் எதிர்வழக்காட மறுத்தோமேயல்லாமல், வேண்டுமென்றே சிறைக்குப் போக வேண்டுமென்கிற எண்ணத்தினாலல்ல. அப்படியிருக்க, இவ்விரண்டு தத்துவங்களும், இப்பொழுது நம்பிக்கைப் பாத்திரமாகிவிட்டதற்குக் காரணம் என்னவென்று யோசிக்கும் போது, மகாத்மா காந்தி தனது இயக்கம், வெற்றிபெற முடியாமற் போனதற்குக் காரணம், படித்தவர்களென்று சொல்லப்படுவோரின், மனப்பான்மையை மாற்ற தனக்கு சக்தியில்லாமற் போனதுதானென்று, பல முறையும் சொல்லி வந்திருப்பது ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரியாரின் புதுத்தோற்றத்தால் கல்லின்மேல் எழுத்துப்போலாகிவிட்டது. அப்படியில்லையென்று சொல்லவேண்டுமானால், ஒத்துழையாமை, தத்துவம் பொய்த்துப்போய் விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அவ்விதம், ஸ்ரீமான். ஆச்சாரியார் சொல்லமாட்டார். ஆனால் ஒருசமயம் சட்டசபைகளில் பொறுப்பில்லாதவர்களும், சுயநலக்காரர்களுமாகக் கூடிக்கொண்டு ஒருவரையொருவர், தேசத்தின் பேரால் வைதுகொண்டும், வழக்காடிக்கொண்டும் சர்க்காருக்கு அநுகூலமாய் இருப்பதின் பலனாய், பொது ஜனங்களைப் பிரிப்பதற்கும், வகுப்பு வேற்றுமைகளையும் உண்டாக்குவதற்கும் காரணமாயிருக்கிறது. ஆதலால் பொறுப்புள்ள ஒரு சிலர் இந்த ஸ்தானங்களை ஆக்ரமித்துக் கொண்டு, தேச நலத்திற்கு நன்மையொன்றுமில்லாவிட்டாலும், கெடுதியாவது, உண்டாகாமல் மதுவிலக்கு என்கிற ஒரு நல்ல காரியத்தின் பெயரையாவது, சொல்லிக்கொண்டு, காலத்தைக் கடத்தி வரலாம் என்று ஒரு சமயம் கருதி இருக்கலாம். அக்கருத்து ஒழுங்கானதென்றே வைத்துக் கொண்டாலும், காரியத்தில் அது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமென்பதைக் கவனிக்கவேண்டும். இப்பொழுது, சட்டசபையில் நாலைந்து கொள்கைக்காரர்களிருக்கின்றார்கள். ஒன்று ஜஸ்டிஸ் கட்சியாரென்போர், மற்றொன்று சுயராஜ்யக் கட்சியார், இன்னுமொன்று, சுயராஜ்யக் கட்சியில் சேராமலிருக்கும் சிலரும், ஜஸ்டிஸ் கட்சியில் சேராமலிருக்கும் சிலரும், இவ்விரண்டிலிருந்து பிரிந்து வந்த சிலரும் ஆக மூன்று முக்கிய கட்சிக்காரர்களிருக்கின்றார்கள். இவர்களில் யாரும் மதுவிலக்கு என்கிற ஒரே காரியத்திற்குப் பாடுபடுவதைத் தவிர, வேறு காரியம் பார்க்கக்கூடாதென்பதற்கு ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள். ஒத்துழையாமை மனப்பான்மையுள்ள, ஆசாமிகளைப்பிடித்துச் சட்டசபைக்கு புதிதாக அநுப்பலாமென்று நினைப்போமேயானால், ஒரு நாலைந்து பேருக்குமேல் சட்டசபையில் ஸ்தானம் பெற சவுகரியமே கிடைக்காது. ஒவ்வொரு ஜில்லாக்களிலும் ஆயிரம், இரண்டாயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் செலவு செய்து கொண்டு சட்டசபைக்குப் போகிற சுயநலப்புலிகள் போட்டி போடும்போது, பெரும்பாலும், தாராளமான பணம், காசு இல்லாத வெறும் ஆசாமியாயிருக்கிற ஒத்துழையாதாருக்கு எப்படி ஸ்தானங்கள் கிடைக்கும்? அதுமாத்திரமல்லாமல், ஒத்துழையாதாருக்குள்ளேயே, வகுப்பு விஷயங்களில் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை ஏற்பட்டு, ஆளுக்காள் ஜாக்கிரதையாய் இருக்கிற நிலைமையில் இந்தக்காரியம் ஒழுங்காய் நடைபெறுமென்று எப்படி எண்ண முடியும்? இப்பொழுதிருக்கிற வகுப்புக் கட்சி வாதங்களெல்லாம் அதிலும் பிரவேசிக்குமா? பிரவேசிக்காதா? இவ்வளவையும் தாண்டிக்கொண்டு, சட்டசபையில் போய் பத்துப்பேர் உட்காருவதாய் வைத்துக் கொண்டாலும், நான்கு வருடமாய் ஒத்துழையாமையின் நிமித்தம் மகாத்மா காந்தி அவர்களும், இன்னும் பல தேசபக்தர்களும் செய்த தொண்டுகளையும், தியாகத்தையும், அநுபவித்த கஷ்டத்தையும், சிறைவாசத்தையும், தங்கள் சுயநன்மைக்கு அநுபவித்துக்கொள்ள, சுயராஜ்யக்கக்ஷியாரென்கிற ஒரு கூட்டத்தார் எப்படித் திடீரென்று வந்து உட்கார்ந்து கொண்டார்களோ, அதுபோலவே சட்டசபையிலும், ஒரு பத்துப்பேர் கஷ்டப்பட்டு, சட்டசபையில் ஸ்தானம் பெற்று வாதாடுவதினால், சர்க்காருக்கு ஏதாவது இடைஞ்சல் நேரிடுவதாய்த் தோன்றி, அவர்கள் ஏதாவது ஒன்றிரண்டு துண்டு வீசுவதாயிருந்தால், அதற்காசைப்பட்ட சில ஆசாமிகள், அதை உபயோகப்படுத்திக்கொண்டு, நம் காரியத்தைக் கெடுக்க மாட்டார்களென்பது என்ன உறுதி?

அல்லது, ஒத்துழையாமையில் நம்பிக்கையுள்ளவர் என்று சொல்வோர், தாங்கள் போகவில்லையானாலும், தங்கள் திட்டத்திற்கு அனுகூலமாயிருப்பவர்களை சட்டசபையில் ஸ்தானம் பெற உதவிசெய்வதாக வைத்துக்கொண்டாலும், ஒத்துழையாதாரின் உதவிபெற்று சட்டசபைக்குப் போகிறவர்கள், யோக்கியமாய் நடந்து கொள்ளுவார்களென்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? தற்காலம், தேர்தல்களுக்கு நிற்கிறவர்கள் சொல்லுகிற வாக்குறுதிகளும், ஸ்தானம் பெற்ற பிறகு அவர்கள் நடந்து கொள்ளும் யோக்கியதையையும் தலைவர் முதல் தொண்டர் வரையிலுள்ளவர்களின் யோக்கியதையையும் நாம் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். காஞ்சீபுரம் மகாநாட்டைக் கவனித்தவர்களுக்கு நமது ஜனங்களின் நாணயத்தைப்பற்றி எடுத்துச்சொல்லவேண்டிய அவசியமில்லை.

ஆதலால், இம்மாதிரி திட்டங்கள் போட்டுக் கொண்டிருப்பதைவிட, காரியத்தில் பலன் தரத்தக்கதானத் திட்டங்களை வைத்து, பழைய ஒத்துழையாமையையே உயிர்ப்பித்துப் படித்த கூட்டத்தாரை விலக்கி, சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய காரியங்களைச் செய்து, ஒரே உறுதியாய் அதில் நம்பிக்கையுள்ளவர்களை மாத்திரம் சேர்த்துக்கொண்டு, அதற்கு விரோதமான மனச்சாட்சியுள்ளவர்களையெல்லாம் வெளியில் தள்ளி, பரிசுத்தமான எண்ணத்தோடு பழையபடி, மகாத்மா சாரதியாயிருந்து, அஹிம்சாதர்மத்தை ஓட்டினாலல்லாது, வேறு எந்தக் காரியத்தாலும் நாடு விடுதலையும், சுயமரியாதையும் பெறுமென்று எண்ணுவது வெறுங்கனவேயாகும். ஆதலால், இந்நிலை வரும்வரை மனிதனை, மனிதர் தின்றும், ஒருவகுப்பாரை ஒரு வகுப்பார் தின்றும், ஏப்பம் விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது உண்மை மனிதனின் கடமை.

ராஜா முத்தையா

## புது ஆண்டு சன்மானம்.

1926-ம் ஆண்டு பிறக்கப் போகிறது; வருடப்பிறப்பிற்காக "குடிஅரசு" பத்திரிகைக்கு என்ன சன்மானம் செய்யப் போகிறீர்கள்? ஒன்று, "குடிஅரசு"க்கு அதன் நண்பர்கள் ஒவ்வொருவரும் 3 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுங்கள், அல்லது நமது சமூகத்துக்கே கேடு சூழும்படியான பிராமணப் பத்திரிக்கைகளின் ஒரு சந்தாதாரையாவது குறையுங்கள். இதை நீங்கள் செய்தால், "குடிஅரசு"க்கு மாத்திரமல்லாமல், நாட்டுக்கும், பிராமணரல்லாத சமூகத்துக்கும் விடுதலை அளிக்க உங்கள் கடமையைச் செய்தவர்களாவீர்கள்.

## ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கு ஓர் உபதேசம்

நாயக்கரே, உங்களுடைய பிரயத்தனங்களையும், தொண்டுகளையும் நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். நீங்கள் சொல்லுவது, செய்வதெல்லாம் சரிதான். காஞ்சீபுரம் மகா நாட்டில் நீங்கள் கொண்டு வந்த தீர்மானமும் நல்ல தீர்மானந்தான். அதன் தத்துவம் அமுலுக்கு வந்து விடுமானல், இந்தியாவிலுள்ள பிராமணர்கள் உட்பட சகல வகுப்பாருக்கும், சகல மதஸ்தர்களுக்கும், சர்க்காருக்கும்கூட அது நன்மையைத்தான் பயக்கும். தேசமும் சாந்தமடைந்து, அமைதியாய் நடைபெறும். ஆனல், இம்மாதிரி எல்லோருக்கும் திருப்தியாய், சகலரும் சமமாய் வாழுவதனல் சிலருக்கு இப்பொழுதிருக்கிற செல்வாக்கும், சுகமும், வரும்படியும் கொஞ்சம் குறைந்து போகும். அப்படிப்பட்டவர்கள் நமது நாட்டிலுள்ளவரை உங்கள் முயற்சி கை கூடுவது சிரம சாத்தியமான காரியம். நீங்கள் உங்களுக்குக்குள்ள தீவிரத்தினலும், பதட்டத்தினலும் எதிரிகளைத் தந்திரமாய்ச் சுவாதீனப்படுத்திக் கொள்ளுகிற சக்தியை இழந்து போவதோடு பல எதிரிகளையும் சம்பாதித்துக் கொள்ளுகிறீர்கள். பிராமணரும்—பிராமணரல்லாதாரும் ஒத்துப்போய் விட்டால் நம்முடைய கதி என்னுகுமென்று பயப்படுகிற சிலர் பிராமணரல்லாதாருக்குள்ளேயே இருக்கிருர்கள். அவர்களைத் திடீர் திடீரென்று வெளிப்படுத்தி விடுகிறீர்கள். அதனல் அவர்களுக்கு உங்கள் பேரில் ஏற்படும் துவேஷத்தின் பலனைப், உங்கள் முயற்சிக்கு விரோதமாய் நிற்க வேண்டி பிராமணரல்லாதாருடைய நன்மைக்கே விரோதமாய் கிளம்பி விடுகிருர்கள். பிராமணர்கள் எப்படி தங்களை எவ்வளவு மரியாதைக் குறைவாகவும், கேலமாகவும் பேசினலும், எழுதினலும் அவற்றைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல் அடியோடு மறந்துவிட்டு, இப்படி எழுதுகிறவர்களையே மேல் விழுந்து சிநேகமும் செய்து கொண்டு, அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பத்திரிக்கைகளில் எழுதிக்கொண்டும், பேசிக்கொண்டும் மனதில் எத்தனை குரோதமிருந்தாலும், வெளிக்குக் காட்டாமல் அன்பாய் நடந்து அவர்கள் மூலியமாகவே தங்கள் காரியத்தை எவ்வளவு தந்திரமாய்ச் சாதித்துக் கொள்ளுகிருர்களோ, அதுபோல் நீங்களும் செய்யாவிட்டாலும், அவர்களைப் பிரித்து விடாமலாவது பார்த்துக் கொள்ளவேண்டாமா? மகாத்மா காந்தியே இப்படிப்பட்ட சில ஆசாமிகளைத் தடவிக்கொடுத்துக் காரியத்தைச் சாதிப்பதாய் நீங்களே பல தடவைகளில் சொல்லியிருக்கிறீர்கள். அம்மாதிரி காரியத்தை நீங்களேன் பின்பற்றக்கூடாது இப்படி நீங்கள் அதிகமான விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்ளுவதில் உங்களுக்கு ஒன்றும் பெரிய கெடுதி வாராவிட்டாலும், நீங்கள் கோரும்காரியங்களுக்குக் குந்தகம் நேரிடுமென்பதைத் தயவு செய்து உணருங்கள்.

ஒரு பழைய நண்பர்

## சுயராஜ்யக்கக்ஷியின் பேராசையும் அதன் முயற்சியும்.

"எச்சில் சாப்பிட்டாலும் வயிறு நிறைய சாப்பிடவேண்டும், எய்து பலனடைவதானுலும் ஆசை தீர அடையவேண்டும்" என்று ஒரு பழமொழியுண்டு, அதுபோலவே நமது சுயராஜ்யக்கட்சியார் ஆதியில் காங்கிரசை மீறிவிட்டு போனுர்கள்; பிறகு, தங்கள் மனச்சாக்ஷிப்படி நடக்க தங்களுக் அனுமதி வேண்டும் என்று காங்கிரசைக் கேட்டார்கள், பிறகு, தங்கள் மனச்சாக்ஷிபடி நடப்பதை பிறர் ஆக்ஷேபிக்கக்கூடாது என்றனர்.

பின்பு தங்களுக்கு வேண்டிய உதவியைக் காங்கிரஸ்,தனது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் செய்யவேண்டும் என்று கேட்டனர்.

பிறகு காங்கிரசில் தாங்களும் ஒரு சரியான பாகமாயிருக்க வேண்டுமென்று கேட்டனர்.

பிறகு, காங்கிரசில் தாங்களே முக்கியஸ்தர்களாகவேண்டும் என்றுகேட்டனர். இவ்வளவும் அடைந்தார்கள். இப்போது தாங்களே காங்கிரசாகிவிட வேண்டும்; தங்களுக்கு பதவிகளும், உத்தியோகமும், காங்கிரசே வாங்கி கொடுக்கவேண்டும்; அப்படி காங்கிரஸ்காரரே எல்லாபதவியும், உத்தியோகமும் சம்பாதித்து கொடுப்பதானலும், தங்களைத்தவிர வேறு யாருக்கும் கொடுக்கக்கூடாது; தங்கள் உத்திரவில்லாமல் காங்கிரஸ்காரரும் அனுபவிக்கக்கூடாது; என்கிற நிலைமைக்கு இப்போது வந்துவிட்டார்கள். இதுகள் எல்லாவற்றிற்கும் காங்கிரஸ் சம்மதிக்கலாம்; ஆனல் இதன் பலனய் தேசத்தில் காங்கிரசுக்கு யோக்கியதையும், பெருமையும் போய்விடுமென்பது மாத்திரம் சத்தியம்.

### கல்கத்தாவில்.

சுயராஜ்யக்கட்சியார் தாங்கள் நிராகரித்த மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும் அனுமதிக்க,மிதவாதக்கட்சியார் எதிர்த்தும், சர்க்கார் மெம்பர்களோடு, தாங்களும் சேர்ந்து கொண்டு மிதவாதிகளைத் தோற்கடித்து சம்பளத்தை அனுமதித்துக்கொண்டார்கள்.

### மத்திய மாகாணத்தில்.

முன்பு தாங்கள் குறைத்த மந்திரிகளின் சம்பளத்தை மறுபடியும் உயர்த்த ஒரு தீர்மானம் கொண்டுவந்து விட்டார்கள்.

இவ்விரண்டு காரியங்களும் அடுத்த தேர்தல்களில் தாங்களே ஜெயிக்கப்போகிறோம் என்கிற உறுதியும், அப்படி ஜெயித்தால் மந்திரி பதவிகள் தங்களுக்கே கிடைக்கும் என்கிற ஆசையும், இப்பொழுதே தங்களுக்கு இருப்பதையும், அதற்காக முன் ஜாக்கிரதையாய் இப்பொழுதிருந்தே சம்பளத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்கிற தந்திரத்தையும் காட்டுகிறது. அல்லவா?

## சிவலோக பதவி

பழையகோட்டை பட்டக்காரரும், ஈரோடு, தாலூகா போர்டு பிரசிடெண்டும், கொங்குவேளாள சமூகத்தின் தலைவரும், பெரிய மிராசுதாரருமான ஸ்ரீமான். ராவ்பகதூர். நல்லதம்பிசர்க்கரை மன்றாடியார் அவர்களின் அருமை முதல் மனைவியார், நாளது குரோதன வருஷம் மார்கழி மாதம் 1-ந் தேதி (15—12—25) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4-30-க்கு சிவலோக பிராப்தியடைந்தார், என்னும் கொடுஞ் செய்தியைக் கேட்கநாம் வருந்துகிறோம். அவ்வமையார் தனது கணவருக்கு வாசுகி அம்மையார்போல் இருந்ததல்லாமல்,மற்றபொது ஜனங்களிடத்திலும், குறிப்பாக ஏழைகளிடத்திலும் அன்போடும், கருணையோடும் நடந்து கொண்டு வந்தவர். தனது அருமைக் கணவரையும், அன்பு குழந்தைகள் இரண்டையும், உற்றார் உறவினர் ஏழைமக்களையும் விட்டு, அகாலத்தில் மரணமடைந்த அவ்வம்மையார் ஆத்மா சாந்தியடைவதோடு, அருமை மனைவியை இழந்த நமது பட்டக்காரர் அவர்களுக்கும் அன்பு குழந்தைகளுக்கும், மனச்சாந்தியையும், ஆறுதலையும் அளிக்க, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

## ஸ்ரீமான். திரு. வி. கலியாண சுந்திர முதலியார்

ஸ்ரீமான். முதலியார் தனது "நவசக்தியில்" "எனது நிலை" என்ற தலைப்பிட்டு நமது "குடிஅரசின்" 29 கேள்விகள் கொண்ட கட்டுரைக்கு மறுப்பு எழுதுவதுபோல் எழுதியிருக்கிறார். அதற்கு எமது குடி அரசிலும் எமது நிலை என்று தலைப்பிட்டு ஓர் கட்டுரை எழுதக்கருதி, இவ்வாரம் 'குடிஅரசுக்கு" எனது நிலை, ஸ்ரீமான். முதலியார் நிலை ஆகிய இருவர் நிலை முழுவதையும் விவகரிக்கஇடம் போதாதெனக்கருதி இவ்வாரத்திய "குடிஅரசு"பன்னிரண்டு பக்கத்தை, இதற்கென்றே பதினாறுபக்கமாக்கப்பட்டது. வெளிப்படுத்த முடியாத பல இடங்களிலிருந்தும், நண்பர்களிடமிருந்தும், கடிதங்கள் வந்ததாலும், ஸ்ரீமான். முதலியார் அவர்களுக்கும், எனக்கும் பொதுவான நண்பர்கள் சிலர் நேரில் வந்து 144 தடை உத்தரவு போட்டதாலும், கருதியபடி நடக்கமுடியவில்லை. ஆனாலும், ஸ்ரீமான். முதலியாரின் மறுப்பில் காணும், விஷயங்களை சுமார் 30 கூறுகளாய்ப் பிரித்திருந்தாலும், இரண்டு ஒன்றை மாத்திரம் பொது ஜனங்களுக்கு விளக்க நண்பர்களின் அநுமதி பெற்று ஓர் சிறுகுறிப்பை எழுதிமுடித்து விடுகிறேன்.

ஸ்ரீமான் முதலியார் மறுப்பில் காணும், முக்கிய விஷயங்களில் சில கீழே விவகரிக்கிறேன்:—

1. "வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை ஆதரித்து ஸ்ரீமான். முதலியார் எங்கும் பேசவில்லை; எழுதவில்லை" யென்பது.

2. "ஸ்ரீமான். கிருஷ்ணசாமிப் பாவலர், ஸ்ரீமான். இராமநாதன் பிரேரேபணைக்கு, 100-க்கு 90 பேர், பிராமணரல்லாதாராயிருக்கவேண்டுமென்று ஒரு துண்டு ஓட்டவைத்தார்" என்பது.

3. "ஸ்ரீமான். இராமநாதனின் தீர்மானம் விஷயாலோசனைச் சபையில் தோற்றுப்போய் விட்டதால், மகாநாட்டில் வலியுறுத்தப் போவதாக அறிவித்ததை ஏற்றுக்கொள்ளப்பட்டது" என்பது.

4. "மகாநாட்டில் முதல் தீர்மானம் விவாதத்திலிருந்த காலத்தில், 25 பிரதிநிதிகள் கையெழுத்துக் கேட்டதாகச்" சொல்லுவது.

5. "ஸ்ரீமான். நாயக்கர் காங்கிரஸோடு சுயராஜ்யக்கக்ஷி கலந்து விடுவதற்குச் சம்மதிக்காமல்,வகுப்புவாரிபிரதிநிதித்வத்தை எப்படிக் கேட்கலாமென்று கருதி வகுப்புவாரி தீர்மானத்தை ஒழுங்குத்தவறென்று நிராகரித்ததாகச் சொல்வதும்,வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ தீர்மானத்தை காங்கிரஸ் மகாநாட்டில் அநுமதிப்பது அநாவசியம்" என்பது.

(பதில்)

1. சென்னை மாகாணச்சங்கத்தில் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் ஓர் முக்கியமான கொள்கையென்பதும், அச்சங்கத்தில் முக்கியஸ்தராகவே ஸ்ரீமான்.முதலியார் விளங்கினரென்பதும், அச்சங்கத்தை ஆதரிக்க முக்கிய பத்திரிக்கையான "தேசபக்தனு"க்கு ஸ்ரீமான். முதலியார், ஆசிரியராயிருந்தாரென்பதும், அதற்குள் உலகம் மறந்திருக்காது. இந்நிலையில் இவர் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை தான் ஆதரிக்கவில்லை யென்று சொல்லுவது,சரியாயென்பதை வாசகர்களே கவனித்துக்கொள்ளட்டும். மற்றும், "தேசபக்தன்" பத்திரிக்கையின் பிரதிகளை ஸ்ரீமான். முதலியாரே சாவதானமாய் படித்துப்பார்க்கட்டும்.

2. ஸ்ரீமான். பாவலர், ஸ்ரீமான், இராமநாதன் தீர்மானத்திற்கு, ஒருதுண்டு ஓட்டவைத்தாரென்று சொல்லுவது உண்மைக்கு விரோதமானது. ஸ்ரீமான். இராமநாதன் தீர்மானம், விஷயாலோசனை சபையில் தோற்றுப்போன பிறகுதான், ஸ்ரீமான். பாவலர் தன்னுடையதைப் பின் வாங்கிக்கொண்டிருக்கிறார், இவர் பின் வாங்கிக்கொள்ள ஸ்ரீமான். முதலியார் அநுமதி கொடுத்தது, ஒப்புக்கொள்ளத்தக்க தல்லவென்றுகூட நானும், ஸ்ரீமான், தண்டபாணி பிள்ளையும் விஷயாலோசனைக்கமிட்டியில் வாதாடியிருக்கிறோம். இவையெல்லாம், ஸ்ரீமான். முதலியார் ஞாபகமில்லாமற் சொல்லுகின்றாரென்றுகூட சொல்ல மனம் வரவில்லை. உண்மைக்கு நேர் விரோதமாகப் பேசுகின்றாரென்பது தான் தனது அபிப்பிராயம்.

3 & 4. ஸ்ரீமான்.இராமநாதனின் விஷயாலோசனைக்கமிட்டியில், தோற்றுப்போன தீர்மானத்தை மகாநாட்டில் வலியுறுத்த அநுமதித்ததாகச் சொல்லுவது ரொம்பவும்சரி; ஆனால், அப்படி ஒப்புக்கொண்டவர் மகாநாட்டிற்கு வந்த பிறகு ஷை தீர்மானத்தைப் பிரேரேபிக்க, 25 பிரதிநிதிகள் கையெழுத்து வேண்டுமென்று சொன்னதை மாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறாரே தவிர, அப்படிச்சொல்ல நேர்ந்த அவசியமென்னவென்பதை அவர் சொல்லவில்லை. அல்லாமலும், முதல் தீர்மானம், மகாநாட்டில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், 25 கையெழுத்துக் கேட்டதாகச் சொல்வது மனதறிந்து சொல்லும், உண்மைக்கு மாறுபட்ட விஷயமாகும். முதல் தீர்மானத்தின், இரண்டாவது பாகம் பின் வாங்கிக்கொள்ளப்பட்டு, முதல் பாகம் நிறைவேற்றப்பட்ட பின்பு நானும், ஸ்ரீமான். எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரும், பிராமணர்—பிராமணரல்லாதார் விஷயத்தைப்பற்றி தனியாக ஓர் இடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த சமயத்தில், இது சொல்லப்பட்டது என்பது உறுதி. ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் பக்கத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது தான், ஸ்ரீமான். இராமநாதன் என்னிடம் வந்து, ஸ்ரீமான். முதலியார் திடீரென்று 25 பிரதிநிதிகள் கையெழுத்துக் கேட்கிறாரென்று சொன்னது. அதன் பிறகுதான் கையெழுத்து வாங்க ஏற்பாடு செய்து சுமார் 30 கையெழுத்து வாங்கிக் கொடுத்தது. அது சமயம், கல்பாத்தித் தீர்மானம் விவாதத்திலிருந்தது. இதற்கு வேண்டிய ருஜுக்களும் இருக்கின்றது.

5. காங்கிரசோடு சுயராஜ்யக் கட்சி கலருவதற்கும், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்பதற்கும் என்ன சம்பந்தம்? வகுப்புவாரிப்பிரதிநிதித்வமென்பது சட்டசபைப் பிரவேசம் மாத்திரந்தானா? நமது நாட்டில் சட்டசபை ஸ்தானங்கள் தேர்தல்களில் ஓட்டு மொத்தம் ஒரு நூறு ஸ்தானங்கள் கூட இருக்காது. சட்டசபைகளின் மூலம் ஊதியம் பெறும் ஸ்தானம் ஒரு பத்து ஸ்தானங்கள்கூட இருக்காது. நான் கேட்கும் வகுப்புரிமை ஸ்தானங்கள் ஸ்தலஸ்தாபனங்களுட்பட பொதுஜன ஊழியம், அரசியல் ஊதிய அதிகாரப் பதவிகளுட்பட. காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களின் ஆதிக்கங்கள் உட்பட, ஆகிய இவைகளில் சுமார் லட்சக்கணக்கான ஸ்தானங்களுக்குக் குறையாமல் உள்ள பதவிகளுக்கும், அதிகாரத்திற்கும், நான் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்பது. இவ்வளவு பொறுப்புள்ள உரிமைகளையும் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சியார் வசம் ஒப்படைத்திருக்கிறதா? ஸ்தலஸ்தாபனம் முதலிய வைகளைக் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டுமென்று, காஞ்சீபுரம் மகாநாடு தீர்மானித்திருக்கிறதேயல்லாமல், சுயராஜ்யக் கட்சியார் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானிக்கவில்லை. லக்னோபேக்டும், சுயராஜ்யக்கட்சி ஏற்பட்டதற்குப் பிறகுகூட கல்கத்தா பேக்டும்,காங்கிரஸ்மூலியமாகவும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு வகுப்புரிமையும், காங்கிரஸ் மூலமாய்ப் பிரேரேபிக்கப்பட்டதே யல்லாமல்,சுயராஜ்யக்கட்சியின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. காங்கிரஸ் சார்பாக கூட்டப்பட்ட இம்மகாநாடு, வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது அனாவசியமென்று தான் தள்ளிவிட்டேனென்று ஸ்ரீமான். முதலியார் சொல்வதில், எவ்வளவு ஒழுங்கிருக்கிறதென்பதை வாசகர்கள் கவனிப்பார்களென்று நினைக்கிறேன்.

இதே ஸ்ரீமான். முதலியாரவர்கள் காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைமை தனக்குக் கிடைக்கும் முன்பாகத் தனது பத்திரிக்கையிலும், பல மேடைகளிலும் நமது நாட்டில் சுயராஜ்யக்கட்சி ஒன்று தோன்றின பிறகு தான் வகுப்புச்சண்டைகளும், வகுப்புப் பூசல்களும்,வகுப்புப்பிணக்குகளும் ஏற்பட்டதாகக் கை ஓய்வுறும்படியும்,வாய் ஓய்வுறும் படியும் எழுதியும், பேசியும் வந்திருக்கிறார் .அப்படியிருக்க, சுயராஜ்யக்கட்சியின்,திட்டத்தைகாங்கிரஸ் எடுத்துக்கொண்டு நடத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தைத் தானேபிரயத்தனப்பட்டுகொண்டு வரச் செய்ததாகவும், அதை ஸ்ரீமான். நாயக்கர் எதிர்த்தால்,வகுப்புரிமை கேட்பதற்கு அர்த்தமில்லையென்றும், ஸ்ரீமான். முதலியார் எழுவதற்கு என்ன அர்த்தமென்று விளங்கவில்லை.

கல்பாத்தியில் தெருவில் நடக்காமைக்காக, சர்க்கார் சமாதானத்தின் பேரால் போடப்பட்ட 144 உத்திரவும், காஞ்சிபுரம் மகாநாட்டில் வகுப்புவாரிப்பிரதிநிதித்வ தீர்மானத்தைப் பிரேரேபிக்கக்கூடாதென்று ஸ்ரீமான்.திரு. வி. கலியாண சுந்தரமுதலியார்,ஒழுங்கின்பெயரால் போடப்பட்ட 144 உத்தரவும்,ஒரேசக்தியை அடிப்படையாகக் கொண்டது என்பதுதான் நமது முடிவு. அந்தசக்தி என்று நம் நாட்டைவிட்டு ஒழியுமோ, அன்றுதான் நமது நாட்டுக்கும், சமூகத்துக்கும், விடுதலையும், சுயமரியாதையும் உண்டாகும். மற்றப்படி ஸ்ரீமான். முதலியாரவர்கள் என்னைப்பற்றி எழுதியிருக்கும் பல விஷயங்கள் என்னையே பொறுத்திருப்பதால், நான் அவற்றிற்கு சாவதானமாக நண்பர்களின் விடைபெற்றுப் பதிலெழுதுகிறேன்.

ஈ. வே. ரா.

# பிராமணரல்லாதார் மகாநாட்டைப்பற்றி பிராமணப் பத்திரிக்கைகளின் ஓலம்.

சென்னையில் இம்மாதம் 20, 21-ந் தேதிகளில் நடைபெற்ற பிராமணரல்லாதார் 9-வது மகாநாட்டு நடபடிக்கைகளைப் பற்றி, "சுதேசமித்திரன்" "ஸ்வராஜ்யா" முதலிய பிராமணப் பத்திரிகைகள் ஆத்திரம் பொறுக்காமல் வயிறு வயிறாய் அடித்துக்கொண்டு ஓலமிடுகின்றன. அவற்றில் சுதேசமித்திரன் பத்திரிகை "வசவு மகாநாடென்று" தலையங்கமிட்டு அடியிற் கண்ட ஒப்பாரியைச் சொல்லிக்கொண்டு அழுகின்றது. அவற்றில் முக்கியமான சிலவற்றைக்கீழே குறிப்பிட்டு அதற்குச் சமாதானம் எழுதுவோம்.

1. "இந்த மகாநாட்டிற்கு ஜனங்கள் அதிகமாக வரவில்லையே யென்று ஸ்ரீமான். டாக்டர். சி. நடேசமுதலியார் சொன்னதால், இம்மகாநாட்டிற்கு பிராமணரல்லாதார் ஆதரவு; இல்லை"யென்பது.

2. "சில பிராமணரல்லாதாரும், அக்ராசனாதிபதி, கனம். யாதவரும்கூடி பிராமணர்களை நன்றாகத்திட்டினார்கள்,"என்பது.

3. இந்த மாகாணத்திலும், பம்பாய் மாகாணத்திலும் ஜஸ்டிஸ் கட்சி அதிகாரப் பதவியிலிருக்கின்றது, ஜனங்களுக்கு இவர்களால் என்ன செய்யப்பட்டிருக்கிறது" என்பது.

4. "பம்பாய் மாகாணத்தில் மதுவிலக்கு விஷயமாய் ஜஸ்டிஸ் கட்சியாரின் ஒரு லக்ஷியத்தை அந்த கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொண்டனர், ஆனால், இந்தியா கவர்ன்மெண்டார் அதை நிராகரித்து விட்டனர். அதன்மேல் பம்பாய் மந்திரி ராஜிநாமாச்செய்தாரா?" என்பது.

5. "தென்னாப்பிரிக்கா இந்தியரிடம் அநுதாபம் கூறி ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. அதை அமுலுக்குக் கொண்டுவர கவர்னர் ஜெனரலோ, அரசர் பெருமானோ நிராகரித்துவிட்டால், கனம். பனகால் இராஜா, கனம் யாதவர் தங்கள் கவர்ன்மெண்டின் மூலமாக இராஜப்பிரதிநிதிக்கு வலியுறுத்த ஏற்பாடு செய்வார்களா?" என்பது.

6. "பிராமணர்களைத் திட்டினால் மாத்திரம், கவர்ன்மெண்டார் சுய ஆட்சி அதிகாரம் கொடுத்துவிட மாட்டார்கள்; வருடமொருமுறை தீர்மானம் செய்தாலும் கொடுத்துவிட மாட்டார்கள், உடனே சுயராஜ்யம்பெற வேறு என்ன செய்வார்கள்? எனவே, ஜனங்கள் மெச்ச சுயராஜ்ய அதிகாரம் கேட்டுவிட்டு; அதிகாரவர்க்கம் மெச்ச அவர்களுக்குத்துணை நிற்பார்கள்." என்பது.

## ஸ்வராஜ்யா பத்திரிக்கையின் மாரடிப்பு

சுதேசமித்திரன் சொன்னதில் சிலதையே சொல்லி, இப்பத்திரிகை அடித்துக்கொண்டதோடு, "தொழிலாளருக்கு என்ன செய்தார்கள்?" "ஒடுக்கப்பட்டவருக்கு என்ன செய்தார்கள்?" "வைக்கம் சத்தியாகிரகத்திற்கு என்ன செய்தார்கள்?" "யாராவது சிறைக்குப் போனார்களா?" "ஜில்லா, தாலூகா சபைகளில் அக்கூட்டத்தினரைச் சேர்ந்தோரே அதிகம், ஸ்தல சுயஆட்சி இலாகா அந்தக்கட்சித் தலைவர் கையிலேயே இருக்கின்றது; அதனால் ஜனங்களுக்கு என்ன செய்து விட்டார்கள்?" என்று கேட்கிறது.

"மகாநாட்டுக்கு ஜனங்கள் அதிகமாய் வரவில்லையென்று ஸ்ரீமான் டாக்டர் நடேசமுதலியாரே சொன்னதால், இம்மகாநாட்டுக்குப் பிராமணரல்லாதார் ஆதரவில்லையென்பது விளங்குகிறதென்று" இரண்டு பத்திரிகைகளும் கேட்கிறது.

(பதில்)

'ஸ்வராஜ்யா'வாவது',"சுதேசமித்திரனா"வது, இன்னும் எந்த பிராமண பத்திரிக்கையாவது அந்த மகாநாட்டிற்கு இத்தனை பெயர்கள் தான் வந்தார்களென்று எழுதவேயில்லை. யாரார்வந்தார்களென்று அவர்கள் பெயராவது எழுதவே இல்லை. இவ்வளவு அல்பபுத்தி தம்மிடம் இருப்பதை மறந்துவிட்டு, மரியாதைக்காக பெருந்தன்மையோடு நமது கூட்டத்திற்கு வரவேண்டிய ஜனங்கள் வரவில்லையேயென்று ஸ்ரீமான். நடேச முதலியார் சொன்னால், அந்த வார்த்தையை முன்னாற் பிடித்துக்கொண்டு, பிராமணரல்லாதார் மகாநாட்டுக்குக் கூட்டம் வரவேயில்லை; அது சரியான பிரதிநிதித்துவமல்லவென்று சொல்லுவது, எவ்வளவு சின்னத்தனம். 21-ந் தேதி ஜஸ்டிஸ் பத்திரிக்கையில் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்களென்று சொல்லி, சுமார் 150 கனவான்களுடையவும், சீமாட்டிகளுடையவும், பெயரைக்குறிப்பிட்டு,விக்டோரியா பப்ளிக் ஹால் பிடிக்காமல், திரளான பிரதிநிதிகள் வந்தார்களென்று எழுதியிருக்கிறது. அதில் ஏறக்குறைய, சட்டசபை மெம்பர்கள், மந்திரிகள், ஜமீன்தாரர்கள், மகாராஜாக்கள், தாலூகா போர்டு, ஜில்லாபோர்டு, முனிசிபாலிட்டி, இவைகளின் தலைவர்கள், அங்கத்தினர்கள், ஜட்ஜ், திவான்முதலிய வேலைகள்பார்த்து இளைப்பாறும் கனவான்கள், பெரிய மிராஸ்தாரர்கள், பிரபலவர்த்தகர்கள், கிறிஸ்தவ கனவான்கள், மகமதிய கனவான்கள், தாழ்ந்த வகுப்பாரென்று கூறப்படும் வகுப்பைச்சேர்ந்த கனவான்கள், சர்வ கலாசாலை அதிகாரிகள், வைதிக ஒத்துழையாமையைச் சேர்ந்தவர்கள், சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்கள், முதலிய கனவான்களாகவே சுமார் 150 பேரும், மற்றும் தொழிலாளிகள், ஏழைக்குடியானவர்கள், நடுத்தர வகுப்பார்கள் ஆகிய அனைவருமாய் மகாநாட்டின் ஸ்தலம் எவ்வளவு இடம்கொள்ளுமோ அவ்வளவும் நிறைந்து, மேற்கொண்டும் வெளியில் இடம் பிடிக்காமல் கூட்டமாகவும் ஜனங்களிருக்க, அவற்றை இம்மாதிரி தங்கள் பத்திரிக்கையில் திரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்திருக்கிறது. இவற்றை நாம் ஓர்கேள்வி கேட்கிறோம். அதாவது, தேசத்துக்கே பொதுவானதென்றும், மிகுந்த செல்வாக்குடையதென்றும், யாரோ சிலர்தவிர, மற்றும் எல்லோராலும், ஆதரிக்கப்படுகிறதென்றும் சொல்லுகிறதும், 33 கோடி ஜனங்களுக்கு பிரதிநிதிசபையாயிருக்கிறகாங்கிரஸ் மகாசபையின் பேரால், தமிழ்நாட்டில் 2 கோடி ஜனங்களுக்கு மேலாக பிரதிநிதிஸ்தானம் பெற்றதும், பிராமணர்களால் தமிழ்நாடு காந்தியெனக் கொண்டாடத்தக்கவருமான, திரு வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடந்ததுமான, காஞ்சீபுரம் மகாநாட்டுக்கு எத்தனை பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்? அதற்குமுன் நடந்த திருவண்ணாமலை, மகாநாட்டுக்கு எத்தனை பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்? இதன் கணக்கைப் போட்டு 2½கோடி ஜனங்களுக்கு விகிதாசாரம் பிரித்துப் பார்த்து, பிராமணரல்லாதார் மகாநாட்டுக்கும் வந்திருந்த ஜனங்களை கணக்கெண்ணி விகிதாச்சாரம் பிரித்துப் பார்த்திருந்தால், தேசத்தில் எதற்கு யோக்கியதை வளர்ந்து கொண்டு வருகின்றதென்பது நன்றாய்த் தெரியவரும். திருவண்ணாமலை மகாநாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை சுமார் 250 கூட இல்லையென்பது நமது ஞாபகம். அவற்றில் பல ஜில்லாக்களுக்கும், தாலூகாக்களுக்கும், வேறு ஜில்லாக்காரரும், வேறு தாலூக்காக்காரரும் பிரதிநிதிகளாய்க் கூட இருந்தார்கள். சில ஜில்லாக்களுக்கு இரண்டொருவர்தான் வந்திருந்தார்கள். சென்னையிலிருந்து ஒரு கனவான் தனது கட்சிக்கு மெஜாரிட்டி சம்பாதிப்பதற்காக, தனது ஆட்கள் வசம் ரூபாய்களைக் கொடுத்து அனுப்பி, ஆள் சேர்த்துக்கூட, சரியானபடி கூட்டம் சேர்க்க முடியாமற் போய் விட்டது. காஞ்சீபுரத்திலும், மகாநாடு நடந்ததென்று பெயரேயொழிய அங்கும் 250 பிரதிநிதிகள்கூட சேரவேயில்லை. அங்கு வந்திருந்த பிரதிநிதிகளிலேயும், பொது ஜனங்களுக்கு உண்மையான பிரதிநிதிகள் எவ்வளவு பேர்? வரப்போகும் தேர்தல்களில் நின்று ஸ்தானம் சம்பாதிக்க வந்த பிரதிநிதிகள் எவ்வளவு பேர்? தேர்தல்களில் ஏஜண்டு வேலை சம்பாதித்துப் பணமடைய வந்தபிரதிநிதிகள் எவ்வளவு பேர்?ஒரு சமூகத்தாரை ஏமாற்றி தாங்கள் ஆதிக்கம்பெறலாமென்று நினைத்து சூழ்ச்சி செய்யவந்தவர்கள் எவ்வளவுபேர்? அவர்கள்சொற்படி ஆடவந்தவர்கள் எவ்வளவுபேர்? தங்கள் விளம்பரத்துக்காக வந்தவர்கள் எத்தனைபேர்? என்பதாகக் கணக்குப்போட்டு அவரவர்களையும் கழித்துத்தள்ளி உண்மையாய் தேசத்தின் குறையை எடுத்துச்சொல்லி, அதற்கு வேண்டிய தீர்மானங்களைச்செய்து அந்தப்படி மனப்பூரணமாய், உண்மையாய், உழைக்க வந்தவர்கள் எத்தனைபேர்? என்று கணக்குப்பார்த்தால்,பிராமணரல்லாதாரின் மகாநாட்டு யோக்கியதை, காங்கிரஸ் மகாநாட்டைவிட சிறந்ததா இல்லையாவென்பது தெரியும். அதைவிட காஞ்சீபுரம் மகாநாடு கண்ணியமாய் நடந்ததா? சென்னை பிராமணரல்லாதார் மகாநாடு கண்ணியமாய் நடந்ததா? என்று பார்ப்பதற்கு, காஞ்சிபுரம் மகாநாட்டில் நிர்வாகம் செய்த தலைவர்களென்பேர் நடந்து கொண்ட போக்

...ஙியதையையும், சென்னை பிராமணரல்லாதார் மகாநாட்டு நிர்வாகிகள் நடந்துகொண்ட யோக்கியதையையும் "குடி அரசு" "தமிழ்நாடு" "நவசக்தி" முதலிய பத்திரிக்கைகளை படித்துப்பார்த்தால் பொது ஜனங்களுக்குத் தெரியவரும். அல்லது இந்தப்பிராமணப் பத்திராதிபர்களே, கொஞ்சநேரமாவது தங்களுடைய ஜாதிப்புத்தியைமறந்து, சத்தியத்தை நினைத்து, நெஞ்சில் கைவைத்துப் பார்த்துக் கொண்டார்களானால், அவர்களுக்கும் உண்மை விளங்கும், இப்பொழுதாவது அவர்களுக்கு யோக்கியதை இருக்குமானால், பிராமணரல்லாதாரில் எந்தத் தொழிலுக்கு, எந்த வகுப்புக்கு, எந்த நாட்டுக்கு, எந்த அந்தஸ்துக்கு, எந்த ஜில்லாவுக்கு, எந்த தாலூகாவுக்கு பிராமணரல்லாதார் சார்பாக அம்மகா நாட்டுக்கு பிரதிநிதிகள் வரவில்லையென்பதை எடுத்துக் காட்டட்டும். தேசத்திலும், காங்கிரசிலும், செல்வாக்குள்ளதாய்ச் சொல்லப்படுவதும், காங்கிரசையே தன் சுவாதீனப்படுத்திக் கொண்டதாய்ச் சொல்லப்படுவதும், 33 கோடி ஜனங்களின், ராஜீய நன்மைக்குப் பிரதிநிதித்வமாயிருக்கிறதென்று சொல்வதுமான சுயராஜ்யக் கட்சியின் மகா நாடு கூடுகிற காலத்தில் எத்தனை பிரதிநிதிகள் வருகின்றார்கள்? அதில் எந்தெந்த ஜாதியார், எந்தெந்த வகுப்பார், எந்தெந்த தொழிலாளர் எந்தெந்த வகையில் தேசத்திற்காகத் தியாகம் செய்தவர்கள் அதில் கூடுகிறார்கள். முதலாவது, சுயராஜ்யக் கட்சி மகா நாடு கூட்டினால் அதன் உண்மைக் கொள்கைகளைப் பற்றி, கதவைத் தாழ்போட்டுக்கொள்ளாமல், இவர்களால் பேச முடிகிறதா? மற்றும், 25கோடி இந்துக்களின் பாரமார்த்தீக சம்பந்தமான, வருணாசிரம தர்ம முதலிய மகா நாடுகள் கூட்டும்போது எத்தனைபேர் வருகிறார்கள்? எந்தெந்த ஜாதியார் வருகிறார்கள்? இவர்களும், ஏதாவது கூடிப் பேசும்போது, கதவைத் திறந்துவைத்துப் பேசக்கூடிய யோக்கியதை இருக்கிறதா? இவற்றையெல்லாம் யோசிக்காமல், மானங்கெட்டவன் செந்தக்காரன் என்கிற தைரியத்தில் கைவசம் பத்திரிகை இருக்கிறது, படிப்பதற்கு ஏமாந்த ஜனங்களிருக்கின்றார்கள், சத்தம் போடுகிறவர்களைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள பணம் இருக்கிறது, என்கிற தைரியத்தின் பேரில் நினைத்தபடியெல்லாம் எழுதியிருக்கிறதே தவிர, வேறு என்ன கடுகளவு யோக்கியம் இருக்கிறது.?

2. "சில பிராமணரல்லாதாரும் அக்ராசனாதிபதி கனம். யாதவரும் கூடி பிராமணர்களை நன்றாய்த் திட்டினார்கள்" என்று எழுதியிருக்கிறது.

(பதில்)

சில பிராமணரல்லாதாரும், அக்ராசனாதிபதியுந்தான் பிராமணர்களைத் திட்டுகிறார்களா? அல்லது தேசமே அவர்களைத் திட்டுகிறதாவென்பதை இவர்கள் கவனிக்கவேண்டும். இந்தியாவிற்கே, அருந்தனமாய் மதிக்கப்படுபவரும், உலகப்பெரியாருமான, மகாத்மா காந்தி, இந்தப்பிராமணர்களைப்பற்றி சொல்லும்போது, இந்தியாவுக்கு, பிரிட்டிஷார் செய்த அக்கிரமத்தைவிட நமதுபிராமணர்கள் செய்தது குறைந்ததல்லவென்று சொல்லியிருக்கிறார். ஸ்வாமி, விவேகாநந்தர், பிராமணர்கள் கக்கின விஷத்தால்தான் இந்தியாகெட்டதென்றும், அவர்கள் விஷத்தைத் திரும்ப அவர்களேதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அந்தப்பிராமண விஷம் எடுபட்டாலல்லாது, இந்தியாவுக்கு விடுதலையில்லையென்றும், சொல்லியிருக்கிறார். பெரிய தியாகியும் தேசபக்தருமான தேசபந்து தாஸ் அவர்கள், தனக்கு அதிகாரமிருந்தால், பிராமண ஸ்திரிகளையெல்லாம் பிடித்து, தீண்டாதவர்களுக்கு ஒப்புவித்து விடுவேன் என்று தனக்கு அவர்கள் மீதுள்ள ஆத்திரத்தைக் காட்டியிருக்கிறார். இந்திய ரிஷியான ஸர். பி. ஸி. ரே அவர்கள், இந்தியாவுக்கு சுயராஜ்யம் வேண்டுமானால், பிராமணர்களையெல்லாம், மூட்டையில் போட்டுக்கட்டி, அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் போட்டுவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் புகழுரைகளா? இன்னும் இந்தப் பிராமணர்களால் மதிக்கப்பட்டவர்களும், மதிக்கப்படுகிறவர்களுமான ஸ்ரீமான்கள். டாக்டர். வரதராஜலு நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர், வி. சர்க்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, வி. ஒ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை, எஸ். இராமநாதன், இராமச்சந்திரச் செட்டியார், சுப்பிரமணிய நாயினார், இர்ரமசாமி ரெட்டியார், இராமநுஜ ரெட்டியார், ஆதிகேசவலு நாயக்கர், சிங்காரவேலு செட்டியார், கந்தசாமி பிள்ளை, சுப்பையா, சாமிநாதஞ் செட்டியார், வெங்கிடகிருஷ்ண பிள்ளை, பவானி சிங், சொக்கலிங்கம் பிள்ளை, வயி. சு. ஷண்முகம் செட்டியார், ராயசொக்கலிங்கம் செட்டியார், தியாகராஜ ஞானியார், சுந்திரம் பிள்ளை, ஹமீத்கான் ஆகிய தேசபக்தர்கள், தேசத்துக்காக ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை, நான்கு தடவை சிறைக்குச் சென்றவர்கள், ஒருவருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், ஐந்து வருடம் தேசத்துக்காக ஜெயிலுக்குச் சென்றவர்கள், பீ. ஏ. எம். ஏ. பி. எல் முதலிய பட்டத்தாரிகள், வைதீக ஒத்துழையாதார், நடுக்கட்சியார், சுயராஜ்யக் கட்சியார் தொழிலை விட்டவர்கள், தங்கள் வரும்படியை விட்டவர்கள் என்று சொல்லப்படும் இவர்களும், இன்னும் அநேக பெரியார்களும், இன்னும் சில ஜில்லா காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், தாலூகா காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், காங்கிரஸ் நிர்வாக மெம்பர்களும், மாகாண காங்கிரஸ் தலைவர்களும், காரியதரிசிகளும், நிர்வாக மெம்பர்களும், மாகாண ஜில்லா, தாலூகா மகாநாட்டுத் தலைவர்களும் எல்லாருந்தான் இந்தப் பிராமணர்களைத் திட்டுகிறார்கள். ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் போன்ற இரண்டொருவர் (அதுவும் வெளியில் மாத்திரம் சொல்வதில்லையே யொழிய மனதில் அடக்கியடக்கியே இளைத்துப் போகின்றார்களென்று சொல்லலாம்.) தவிர, வேறுயார் இவர்களை வாழ்த்துகின்றார்களென்பது நமக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையில், ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதுபோல், ஜஸ்டிஸ் கட்சிக்காரரை மாத்திரம், தங்களை வைகிறார்கள், வைகிறார்களென்று ஓலமிடுவதில் அர்த்தமென்ன?

3. "இந்த மாகாணத்திலும், பம்பாய் மாகாணத்திலும், ஜஸ்டிஸ் கட்சி அதிகாரப்பதவியிலிருக்கிறது; ஜனங்களுக்கு இவர்கள் என்ன நன்மை செய்துவிட்டார்களென்று" எழுதியிருக்கிறது.

(பதில்)

இந்த இரண்டு மாகாணத்திலும், உள்ள பிராமணர்கள், இவர்களை எதிர்த்து, இந்த ஸ்தானங்களைப்பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்ற கருத்துக்கொண்டே பிராமணரல்லாத மந்திரிகளை, ஒரு வேலையும் செய்ய வொட்டாமல் தடுப்பதே தங்கள் கொள்கையாக வைத்துக்கொண்டு, அதற்குஒரு கட்சியை உண்டாக்கி, தங்கள் பணத்தினாலும், பத்திரிக்கையினாலும், தப்பான வழியில் பாமர ஜனங்களையும் ஏமாற்றி சதா சர்வ காலம், மந்திரிகளோடு தொல்லை கொடுப்பதும், இவர்களுக்குப் பதில் சொல்லுவதிலேயே மந்திரிகளுடைய காலத்தைக் கழிக்கவேண்டி வருவதும், கொஞ்ச நஞ்சம் ஏதாவது வேலை செய்யலாமென்று ஆரம்பித்தால், இந்த இடமே போய்விடுமே, பிறகு அதில் பிராமணர்கள் வந்து உட்கார்ந்து கொண்டு, அடியோடு தங்கள் சமூகத்தை ஒழித்துவிடுவார்களே, இதுசமயம் நல்லது ஒன்று செய்ய முடியாமற் போயினும், கெட்டது செய்யவாவது கொடுமைக்காரர்களுக்கு இடம் கொடுக்காமல் தப்பித்துக்கொண்டால் போதும், என்கிற நிலைமையில், அவர்களிருக்கும்படி இவர்கள் செய்துவிட்டதோடல்லாமல், இவ்வளவையும் தப்பி, தேவஸ்தான மசோதா, கல்வி மசோதா, தொழிலாளருக்கு உபகார மசோதா, முதலியதுகளைச்செய்ததான இரண்டொரு நன்மைகளைக்கூட தொலைப்பதற்கு பல சூழ்ச்சிகளும், தந்திரங்களும் செய்துகொண்டு, மந்திரிகள் என்ன செய்தார்களெனக்கேட்பது யோக்கியமாவென்பதை வாசகர்களே கவனிக்கட்டும்.

4. "பம்பாய் மகாணத்தில் கவர்மெண்டார் ஜஸ்டிஸ் கட்சியாரின் மநுவிலக்குத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டாலும், இந்தியா கவர்ன்மெண்டார் அதை நிராகரித்து விட்டார்களே; அதன்மேல், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் ராஜீநாமாச்செய்தார்களா?" என்பது.

(பதில்)

இது எவ்வளவு சுவாதீனம் கெட்ட கேள்வியென்பதை, கொஞ்சமாவது தங்களுக்கு மானம், வெட்கம் இருந்திருக்குமேயானால், நன்றாய் உணர்ந்திருப்பார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரை ஏன் ராஜீநாமாச் செய்யவில்லையென்று கேட்கிற சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த இந்தப் பிராமணர்கள் தங்கள் பிரயத்தனத்தால் இந்தியா சட்டசபையில் நிறைவேறின, ஒருசத்தில்லாத ராஜீய அமைப்புத் தீர்மானத்தை ராஜப்பிரதிநிதி நிராகரித்து விட்டாரே; அப்பொழுது இவர்கள் ராஜிநாமாச்செய்தார்களா?

இவர்களாவது, தங்கள் காரியம் அரசாங்கத்தில் செல்லாவிட்டால், ராஜீநாமாச் செய்து விடுகின்றோமென்று, பாமர ஜனங்களான ஏழை வோட்டர்களிடம், வாக்குத்தத்தம் செய்து, மகாத்மாவின் ஒத்துழையாத்திட்டத்தையும் பாழாக்கிவிட்டு, சட்டசபைக்குச் சென்ற பொய் சத்தியகீர்த்திகள்! அப்படியிருக்க, இவர்களே ராஜீநாமாக்கொடுக்காமல், இன்னமும் தொங்கிக் கொண்டு, போதாக்குறைக்கு சம்பளம் வருகிற உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டு, சட்டசபைகளை ஒழுங்காய் நடத்திக் கொடுக்க, 'அடிமைத்தனத்தையும் பூண்டு கொண்டு,இருப்பதைக் கவனிக்காமல், ஜஸ்டிஸ் கட்சியார் ஏன் ராஜீநாமாக் கொடுக்கவில்லையென்று கேட்கவந்து விட்டார்கள். இது,தான் நிர்வாணமாய் நின்று கொண்டு எதிரில் நிற்பவனைப் பார்த்து நீயேன் கோவணங் கட்டிக் கொண்டிருக்கிறாய், உனக்கு வேஷ்டியில்லையா? என்று கேட்பது போலிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சிக்காரர், தங்கள் காரியங்களை ராஜாங்கத்தார் ஒப்புக்கொள்ளாவிட்டால் ராஜிநாமாக் கொடுத்துவிட்டு வெளியில் வந்து விடுகிறோமென்று, எங்காவது, எப்போதாவது, யாரிடத்திலாவது சொல்லியிருக்கிறார்களா? இதை வாசகர்களே நன்றாய்க் கவனிக்க வேண்டும்.

5. "தென்னாப்பிரிக்கா, இந்தியரிடம் அநுதாபம் காட்டி ஓர் திட்டம் ஏற்பாடுசெய்து, தீர்மானம் செய்திருக்கிறது, இதை அரசாங்கத்தார் நிராகரித்து விட்டால், கனம் பனகல் இராஜா, கனம். பாததவர், வலியுறுத்த ஏற்பாடு செய்வார்களாவென்று" கேட்கிறது.

(பதில்)

இந்தியர்கள் கல்பாத்தித் தெருவில் நடக்கக்கூடாதென்று பிராமணர்கள் தடுத்தபோது, சர்க்காரும், சட்டசபையும் அநுகூலமாயிருந்தும். பிராமண மந்திரியான ஸர். சி. பி, இராமசாமி ஐயர், என்ன சாதித்துவிட்டார்? நல்லது செய்யாவிட்டாலும், கெடுதி செய்யவில்லையென்றாவது ஜனங்கள் நினைப்பதற்கு யோக்கியமாய் நடந்து கொண்டாரா? பிராமண கக்ஷி மந்திரிக்கு ஓர் சட்டம், பிராமணரல்லாத மந்திரிக்கு ஓர் சட்டம் நமது நாட்டுப்பிராமணர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது போலும். இது கண்ணாடி வீட்டில் குடியிருக்கிறவன், கல்வீட்டின் மேல் கல்லெடுத்துப்போடுவதுபோல் இருக்கிறது.

6. "பிராமணர்களைத் திட்டினால் மாத்திரம், சுயராஜ்யம் கொடுத்துவிடமாட்டார்கள்; வருடமொருமுறை தீர்மானம் செய்ததினால் மாத்திரம் சுயராஜ்யம் கொடுத்துவிடமாட்டார்கள்; இதெல்லாம் ஜனங்கள் மெச்சுதலுக்குச் செய்யப்படும் தீர்மானங்கள்தான்; கடைசியாக இவை அதிகாரவர்க்கத்துக்குத் தான் துணையாகும்" என்று எழுதியிருக்கிறது.

(பதில்)

இது எப்படியோ இருக்கட்டும். இதைவிட, இந்தப் பிராமணக் கட்சியாரான சுயராஜ்பக்கட்சியார் என்ன சாதித்து விட்டார்கள்? இரவும், பகலும், தூக்கத்திலும் கனவிலும், பிராமணரல்லாதாரைத் திட்டுவதும், அவர்களைப் பற்றிப் பத்திரிக்கைகளில், பொய்யும், புளுகும் எழுதி அயோக்கியப் பிரசாரம் செய்வதும், இதற்குதவியாய், ஆங்காங்கு கீழ் மக்களையும், மானவெட்கமில்லாதவர்களையும் நிருபர்களாக வைத்துக்கொள்ளுவதும், ஆங்காங்கு வயிற்றுக்கில்லாதவர்களுக்கு ரூபாயைக் கொடுத்து, பிராமணரல்லாதாரை வைவதும், தங்களுக்கு வோட் சேகரித்துக் கொடுக்கும்படி செய்வதும், அதோடு பொது மக்கள் ஏமாறத்தகுந்த இரண்டொரு தீர்மானங்களைப் பற்றி வாயால் பேசுவதுமல்லாமல் வேறென்ன இவர்கள் சாதித்தார்கள்! சாதிக்கிறார்கள்!!சாதிக்கப் போகிறார்கள்!!!

ஸ்வராஜ்யப் பத்திரிகைக்குப் பதில்.

இதல்லாமல், ஸ்வராஜ்யப் பத்திரிகை, "தொழிலாளருக்கு என்ன செய்தார்கள்?" 'ஒடுக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்தார்கள்?' 'வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு என்ன செய்தார்கள்?' "யாராவது சிறைக்குப் போனார்களா?" ஜில்லா, தாலூகா ஸ்தலஸ்தாபன சபைகள் ஆதிக்கம் தங்கள் கையிலிருக்கும்போது என்ன நன்மை ஜனங்களுக்குச் செய்து விட்டார்கள்?"என்று கேட்டு அழுகிறது.

(பதில்)

தொழிலாளருக்காக வேலைசெய்த, ஸ்ரீமான்கள். கலியாண சுந்தரமுதலியார், சுரேந்திரநாத் ஆரியா, வி. சக்கரைச்செட்டியார், சிங்காரவேலு செட்டியார், ஜே. என். ராமநாதன் இவர்களெல்லாம் பிராமணர்களா? பிராமணரல்லாதவர்களா? இவர்களுக்கு மேல், பிராமணர்கள் என்ன சாதித்திருக்கின்றார்கள்? மேலும்,

இப்பொழுது ஐயராய்ப் போகப்பார்க்கும் ஸ்ரீமான். கலியாணசுந்தரமுதலியாரவர்களே, தொழிலாளர் கலவரத்தின்போது தங்கள் விஷயத்தில் பிராமணர்கள் எப்படி நடந்து கொண்டார்கள், ஸர் பி. தியாகராய செட்டியாருட்பட பிராமணரல்லாத அதிகாரிகளும், மந்திரிகளும், தலைவர்களும் எப்படி நடந்துகொண்டார்களென்பதைப் பற்றிப் பலதடவை சொல்லியிருக்கிறார். இது இரகசியமென்றும் சொன்னதினால், இதைப்பற்றி பூராவும் வெளியிட முடியவில்லை, சுருக்கமாய்ச் சொல்வதானால் பிராமணரல்லாத மந்திரிகளின் பிரயத்தனம் இருந்திராவிட்டால் நாங்களெல்லாம் நாடு கடத்தப்பட்டிருப்போமென்று சொல்லியிருக்கிறார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு, ஸ்தலஸ்தாபனங்களில், கூடுமானவரையில் ஸ்தானங்கள் அளித்தது, பிராமணஸ்தலஸ்தாபன நிர்வாகிகள் காலத்திலா? பிராமணரல்லாத ஸ்தலஸ்தாபன நிர்வாகிகள் காலத்திலா?

வைக்கம் சத்தியாக்கிரகத்தில் தொண்டு செய்த ஸ்ரீமான்கள். ஈ. வி. இராமசாமி நாயக்கர், எஸ். இராமநாதன், அய்யாமுத்துக் கவுண்டர் முதலியவர்களெல்லாம் பிராமணர்களா? பிராமணரல்லாதார்களா?

சிறைக்குப் போன ஸ்ரீமான்கள். ஆரியா, தண்டபாணி பிள்ளை, டாக்டர். நாயுடு, வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, இராமசாமி நாயக்கர் இன்னும் எத்தனையோ எழுத முடியாத கனவான்கள் சிறைக்குப் போனது பிராமணரல்லாதவர்களல்லவா? இன்றையத்தினம் சுயராஜ்யக் கட்சியென்று பேர்வைத்துக்கொண்டு, தாண்டவமாடும் பிராமணர்களில் எத்தனை பேர் இதுகளுக்கு உதவினார்கள் என்பதை இந்தப் பிராமணப் பத்திரிக்கைகள் சொல்லட்டுமே!

ஸ்தலஸ்தாபன நிர்வாகங்களில் ஜனங்களுக்கு என்ன நன்மை என்று கேட்பதாயிருந்தால், ஸ்ரீமான்கள். வி. கிருஷ்ணசாமி ஐயரும், ஸர். பி. எஸ். சிவசாமி ஐயருமான பிராமணர்கள் ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தில் இருந்து நடத்தினதைவிட, பிராமணரல்லாதார் இருந்து நடத்தினதில் என்ன மோசம் ஏற்பட்டுப்போய்விட்டது? பிராமணர்களிருந்த காலத்தில், பிராமணர்களையே நியமித்துக்கொண்டு வந்தார்கள். பிராமணரல்லாதார் இருக்கிற காலத்தில், பிராமணர்களுக்கும் ஒன்றிரண்டு ஸ்தானங்களைக்கொடுத்துவிட்டு, பிராமணரல்லாதாரில், தீண்டாதார் உட்பட பலரையும் நியமித்துக்கொண்டு வருகிறார்கள். வேறு என்ன செய்யவேண்டும்? வேறு என்னதான் செய்ய அந்த ஸ்தானங்கள் உதவும்? இவைகளையெல்லாம் கவனிக்காமல், கட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல். பிராமணரல்லாதாரை மூளை இல்லாதவர்களென்று நினைத்துக்கொண்டு, பத்திரிக்கையினாலும், பணத்தினாலும், பிரசாரத்தினாலும்,எப்படியாவது ஏமாற்றி விடலாமென்கிற ஆணவத்தின்பேரில் செய்கிற விஷமப் பிரசாரம் என்பதை பிராமணரல்லாதார் உணரவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பிராமணப்பத்திரிக்கைகளையும், பிராமணப்பிரசாரங்களையும், பிராமணரல்லாதார் வெறுக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பிராமணரல்லாதாருடைய முன்னேற்றம் சமீபத்திலிருக்கின்றதென்பதையும் உணரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

(15-ம் பக்கம் தொடர்ச்சி.)

## ஸர். தியர்கராயர் திருநாள் கொண்டாட்டம்.

### சத்தியமங்கலம்

ஸர். தியாகராயரின் திருநாளை வெகு விமரிசையாய்க் கொண்டாடுவதன்பொருட்டு, முன்னமே தக்க ஏற்பாடு செய்ததின் பிரகாரம், டிசம்பர் மாதம் 16, 17, 18-ந்தேதிகளில் விழாகொண்டாடப்பட்டது. 18-ந்தேதி மாலை ஸ்ரீமான். எல். முத்துச்செட்டியாரவர்கள் தலைமையில் அன்றைய விழாகொண்டாடப்பட்டது. நகரிலுள்ள பிரபலஸ்தர்கள் யாவரும், மகாநாடு நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்திருந்தனர். மகாநாட்டில், ஸ்ரீமான்கள் சிவராமசெட்டியார், இராமசாமி நாயுடு, தேவாஜிராவ்,மற்றும் முகமதிய நண்பரொருவர், ஆகியவர்கள், தியர்கராயரின் சுயநலமற்ற வாழ்க்கையையும், 74-வது வயது வரை தேசத்திற்காகவும், பிராமணரல்லாதாருக்காகவும் அவர் உழைத்த பான்மையையும், சவிஸ்தாரமாக எடுத்துக்கூறியதுடன், தியாகராயர் பேரால், சத்தியமங்கலத்தில் இராப்பாடசாலை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென, ஓர் தீர்மானமும் செய்யப்பட்டது. பின்னர், ஸர். தியாகராயரின் உருவப் படத்திற்கு பூமாலைகள் சூட்டி,ஊர்வலம் புறப்பட்டது. சாரணச்சிறுவர்கள், இருபக்கமும் சூழ்ந்து செல்ல திரளான ஜனங்கள் ஊர்வலத்துடன் சென்றார்கள். கற்கண்டு, தாம்பூலம் பறிமாறப்பட்டு திருவிழா, இனிதே முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### வாணியம்பாடி.

பிராமணரல்லாதாரின் உத்தமத் தலைவரான, காலஞ்சென்ற ஸர். தியாகராய செட்டியாரின் திருநாள்,இம்மாதம் 16, 17, 18ந் தேதிகளில் வாணியம்பாடியில் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. 18-ந்தேதி மாலை நடைபெற்ற மகாநாட்டில், ஸர். செட்டியாரின் மகத்தான தேச சேவையைப் பற்றியும், ஜீவிய சரித்திரத்தையும், ஸ்ரீமான்கள். கந்தசாமி முதலியார், இராமகிருஷ்ண மிஷன் பிரசிடெண்டு, சி. வெங்கிடசாமி நாயுடு, மாணிக்க முதலியார், சுப்பிரமணிய செட்டியார், துரைசாமி நாயுடு முதலியோர் பேசியபின், வந்தனோபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது.

### காஞ்சீபுரம்.

இம்மாதம் 16, 17, 18-ந்தேதிகளில் காஞ்சீபுரத்தில் ஸர். தியாகராயர் திருநாள் வெகு ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. 18-ந்தேதி மாலை காமாட்சி கொட்டகையில், முனிசிபல் சேர்மன். ஸ்ரீமான் சி. சாம்பசிவம் செட்டியார் தலைமையில், மகாநாடொன்று கூடியது. முனிசிபல் கவுன்சிலர்களும், மற்றும் திரளான ஜனங்களும் விஜயம் செய்திருந்தனர். தக்கோலம் ஸ்ரீமான். ஏ. ஆர். செல்லப்பன், தியாகராயரின் மேன்மையான குணாதிசயங்கள் பலவற்றையும், அவரால் பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைப் பற்றியும் கூறினார். பின்னர் ஸ்ரீமான். சுப்பிரமணியம் பிள்ளை செட்டியாரின் திருநாளை வருடந்தோறும்ம் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள பின்னர் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### மதுரை.

ஸர். தியாகராயர் திருநாள் நாளது மாதம் 16, 17, 18–ந்தேதிகளில் மதுரை புதுமண்டபம் ஜவுளி வியாபாரம் ஸ்ரீமான். இ.எம். வெள்ளைச்சாமிக் கோனாரால் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு திரளான ஜனங்கள் விஜயம் செய்தனர். மதுரையில் 18-ந்தேதி மாலை 5–மணிக்கு காஸ்மாபாலிட்டன் கிளப்பில் பல பிரமுகர்களாலும், ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களாலும் தியாகராயர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக்கூட்டத்திற்கு மதுரை முனிசிபல் சேர்மன். ஸ்ரீமான். ஆர். எஸ். நாயுடு தலைமை வகித்தார், என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### கொழும்பு.

கொழும்பு மாநகரில், ஸர். தியாகராயரின் திருநாள் 18-ந் தேதியன்று சிறப்பாக நடைபெற்றது. அன்றுமாலை, கொள்ளுப்பிட்டி செண்ட். மைக்கேல்ஸ் பாடசாலையில் மகாநாடொன்று நடைபெற்றது ஸ்ரீமான். ஏ. எஸ். ஜோன் அவைத்தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள். ஜான்தாமஸ், கனகசபை பிள்ளை, எஸ். கே. முத்தையா முதலியவர்கள் நமது பெரியாரின் ஜீவிய சரித்திரத்தையும், அவரது உயர்ந்த நோக்கங்களையும், அவராலும், டாக்டர். நாயர் பெருமானாலும், பிராமணரல்லாதாருக்கும், ஆதி திராவிடர்களுக்கும் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் எடுத்துரைத்தார்கள்.பின்னர் பல தீர்மானங்கள் செய்யப்பட்டு வந்தனோபசாரத்துடன் மகாநாடு முடிந்தது என, ஒரு நிருபர் எழுதுகிறார்.

### சேலம்.

சேலம், செவ்வாய்ப்பேட்டை தியாகராய நிலையத்தில் ஸர். தியாகராயரின் திருநாள் கொண்டாட்டம் மிகச் சிறப்பாய் நடைபெற்றது. இம்மாதம் 18-ந் தேதி மாலையில், ஸ்ரீதியாகராய நிலையத்தில் மகாநாடொன்று நடைபெற்றது சுமார் 1000 ஜனங்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர். பல ஜமீன்தார்களும், ஹைகோர்ட் வக்கீல்களும், முனிசிபல் கவுன்சிலர்களும், காங்கிரஸ்காரர்களும், லேவாதேவிக்காரர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமான். லோகநாத முதலியார் அவைத்தலைமை வகித்தார், அக்ராசனர் மகாநாடு கூட்டியதின் நோக்கத்தைப் பற்றி சவிஸ்தாரமாகக் கூறினார். பின்னர், ஸ்ரீமான்கள். ரமாநுஜதாஸர், முனுசாமி கவுண்டர், பா. வெ. பொன்னுசாமி நாயக்கர் முதலியவர்கள் பேசிய பின், சேலம் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான். கந்தசாமி பிள்ளை பேசியதின் சுருக்கமாவது:—

தான் யாதொரும்முன் எச்சரிப்புமின்றி, இக்கூட்டத்தில் பேசுவதென்றால், தமக்கு யாதும் புலப்படவில்லையென்றும், என்றாலும், நண்பர்களின் விருப்பத்துக்குக்கட்டுப்பட்டுப் பேசவேண்டியது அவசியமெனத் தோன்றுகிறதாகவும், தான் காங்கிரஸ் வாதியாயிருந்தாலுங்கூட, ஸர். தியாகராயர், பிராமணரல்லாதவர்களைப்பார்ப்பனரின் அடிமைத்தனத்திலிருந்து கரையேற்றிய தீர்க்கதரிசியானபடியால், அவரைப்பற்றிப்பேச முன் வந்ததாகவும், பிராமணர்கள், நம்மவர்களை நடத்தும் தோரணையானது மிகவும் அருவருக்கத்தக்கதாயிருப்பதுடன், நகைப்புக்கிடமாயிருப்பதாகவும், சமயம் நேர்ந்த போதெல்லாம், பிராமணர், பிராமணரல்லாதவர்களிடம், தானம் வழங்குதல், சாத்திரம் சொல்லல், சிரார்த்தகால ஊழியம்புரிதல், இக்காலங்களில் தக்ஷிணை பெறுதல் முதலியவற்றை வைத்துக்கொண்டு, வயிறுநிரப்பி வருகின்றனரென்றும், பிராமணரல்லாதார் நெற்றிவேர்வை நிலத்தில்விழப்பாடுபட்டு உழைத்துப்பெறும் ஊதியத்தைப் பார்ப்பனர்கள் தந்திரமாகவும்,வாய்ச்சாலகமாகவும் பேசியும், போலிச்சாத்திரங்களைக் கொண்டு நம்மவர்களை ஏய்த்தும், தட்சணை என்றும், காணிக்கை என்றும் ஆகிய வழிகளால் நமது பொருள்களைச் சூரையாடியும், நம்மை அவர்கள் காலில் வீழ்ந்து கும்பிடச்செய்தும், ஆன காரியங்கள் செய்து, வருகின்றார்களென்றும், நமது வீடுகளுக்குப் பார்ப்பனர்கள் வரும்போது நாம் எவ்வளவோ கவுரவம் கொடுக்க, நாம் அவர்கள் வீடுகட்குச்சென்றாலோ, நாம் ஒதுங்கி வீட்டுக்கும்புறம்பேநிற்க வேண்டியிருப்பதுடன், “சூத்திரன்” என்னும் பட்டம் பெயரும் பெறவேண்டியிருக்கின்றதென்றும், இதெல்லாம் நம்மவர்க்கு மிக்க அவமானத்தையே விளைவிக்கக்கூடியதாயிருப்பதால் பிராமணரல்லாதார் முன்னேற்றமடைய வேண்டியது மிக்க அவசியமென்றும் பேசினார். பின்னர், தியாகராயப்படத்தை வைத்து ஊர்கோலம் நடைபெற்றது. என ஒருநிருபர் எழுதுகிறார்.

## அருந்தமிழறிந்த அன்பர்களே!

கேட்டார்ப் பிணிக்குந்தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும், சொல்லாற்றல் மிக்காரும், எமது உரைமுகத்தாசிரியரும், உங்கள் அருமை நண்பினருமான காங்கயம் அஷ்டாவதானம் ஸ்ரீமான். சேஷாசலக் கவிராயரவர்கள் பாடிய பிரபந்தங்கள் பலவற்றுள்ளும், ஒன்றாகிய, திருவானைக்கமும், பணிக்கோவை என்ற பிரபந்தம் உங்களிடமிருப்பின் தயவு செய்து சிறியன் மாட்டு அனுப்புவீர்களென்று மிகவும் வேண்டுகிறேன்.

வே ரா. தெய்வசிகாமணி,
உதவித் தமிழ்பண்டிதன்,
மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு

## தேசபக்தியும் நிர்மாணவேலையும்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் பஞ்சாப் படுகொலையாலும் கிலாபத் அநீதியாலும் துயர்வுற்றுப் புலம்பிய பாதமக்களுக்கு மகான் காந்தி அபயங்கொடுத்து பாரததேவியின் விடுதலைக்கு வழிகாட்டியபொழுது, தேசபக்தியென்னும் ஜோதியானது கிளம்பி, இந்தியஜனங்களின் மனதில் குடிகொண்டிருந்த பயமென்னும் இருளைப்போக்கியது. இஜ்ஜோதியின் அருளால் நமது நாட்டிலுள்ள பேதையர்களும் வீரர்களாய் விளங்கினர். அக்காலத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர் சிறைக்கோட்டம் நண்ணியதும், அரசாங்கத்தாரால் விளைவிக்கப்பட்ட பலதுன்பங்களுக்கும் அஞ்சாது தலைவர்கள் தேசமுற்போக்கையே நாடி உறுதியாய் நின்றதும், இப்பக்தியென்னும் அருட்பெருஞ்சோதியின் கடாக்ஷத்தினாலேதான்.

ஆயினும் 1920-ம் ஆண்டில் தோன்றிய பக்தியானது தேசத்தொண்டர்களின் மனதில் மாத்திரம் பிரகாசித்துக் கொண்டிருந்ததே யல்லாமல், பொது ஜனங்களிடம் பரவி விசாலிக்கவில்லை. அதுகாரணம்பற்றி அக்காலத்தில் கிளம்பிய எழுச்சியானது மேன்மேலும் வளர்ந்து வராமல் நாளடைவில் குன்றவாரம்பித்தது. அப்பக்தியானது, தனிப்பட்ட நபர்களுக்கு சாந்தியளிக்கப் போதுமான வலிமையுடையதாயிருந்ததே யல்லாது, அஞ்ஞான மேலீட்டால் கண்மூடிக் கிடக்கும் பொதுமக்களைத்தட்டி யெழுப்பப்போதிய சக்திவாய்ந்ததாயிருக்கவில்லை. அதுகொண்டே மகாத்மாகாந்தி தனிப்பட்ட நபர்களுக்கு ஸ்வாராஜ்யம் கிடைத்து விட்டதென்று, சொன்னாரே யல்லாமல் தேசத்திற்கு ஸ்வராஜ்யம் கிடைத்ததென்று சொல்லமுடியவில்லை.

நமது தேசபக்தி யென்னும் முழுமதியில் தோன்றிய இம்மாசைக்களைய 1922-ம் வருஷத்தில் பர்டோலித் திட்டம் ஏற்பட்டது, இத்திட்டத்தின் தத்துவத்தை நமது நாட்டு அறிஞர்பலர் இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை யானாலும், பொது மக்களின் சேவையால் நாளடைவில் இத்திட்டம் வலியடைந்து வருகிறது. நிர்மாணத்திட்டத்தை செவ்வனே நடத்தி வருவதற்கு பழைய பக்தி மார்க்கம் மட்டும் போதாது. பக்தி யென்பது ஓரான்மாவுக்கும் ஆண்டவனுக்குமுள்ள பந்தமாகும். இப்பக்தி தனிப்பட்ட ஒருயிரை உய்விக்கும் பொருட்டு உதித்து, அவ்வுயிரின் சுயநலமாகிய மோக்ஷசாதனத்தையே கருதியுழைப்பது. இவ்வகையில் 1920-ம் ஆண்டில் தோன்றிய தேசபக்தியும் தனிப்பட்ட தொண்டர்களின் மேன்மையையே விளங்கவைத்தது. அடுத்தபடியாகத் தோன்றிய நிர்மாணத்திட்டமோவெனில் பூரண பக்தியினின்றும் எழும்பும் அன்பையொட்டி நிற்பது. பரமனையும் ஓரான்மாவையும் பக்தியென்னும் கயிறானது எப்படி, ஒன்று சேர்த்துக்கட்டுகின்றதோ அங்ஙனமே அன்பெனும் பாசம் ஏனைய உயிர்களை ஒன்று சேர்த்து கட்டுகின்றது. ஆண்டவனிடத்தில் பக்தி பூண்டொழுகும் ஒருவனுக்கு அவ்வாண்டவனுடைய ஏனைய சிருஷ்டியினிடத்தில் அன்பு தோன்றுவது இயற்கை. பக்தனுடைய மனதினின்றும், தன்னலமென்னும், தடையானது நீங்கினவுடனே அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து சகல ஜீவகோடிகளிடத்தும் பரவுகின்றது. ஆண்டவன் முன்னிலையில் பக்தனாய் நின்றவன் பிறகு ஜனங்கள் முன்னிலையில் தொண்டனாய் உலவுகிறான்.

ஆதி பக்தனுக்கும் அந்தத் தொண்டனுக்கும் அநேக வித்தியாசங்கள் உள. பக்தன் தன்னையும், தான் பக்தி பூண்டொழுகும் பொருளையும், பந்தப்படுத்த வேண்டி ஓர் சிறுகோயிலில் வதிக்கின்றான். தொண்டன் பிறருக்கு பணி செய்யும் முகத்தான் பரந்த வெளியில் பல் வேறு சிருஷ்டியின் மத்தியில் வசிக்கிறான். பக்தன் ஒரேவேஷத்திற்கு ஆளாயிருப்பதால் படபடப்பும் சாந்தமின்மையும் அவனிடம் காணப்படும். தொண்டன் கர்மயோகியாதலால் மனவமைதியும் பகுத்தறிவு கொண்டொழுகும் திறமையும் அவனிடம் விளங்கும். பக்தனுடைய நிலை தனி பொருவனுடைய சுகதுக்கங்களை பொறுத்து நிற்பதாதலால் அவனுடைய குற்றங்கள் பிறருக்கு அநீதி விளைப்பதில்லை. தொண்டனுடைய நிலை பல்வேறு ஜனங்களுடைய இன்பதுன்பங்களைச்சார்ந்து நிற்பதால் அவன் பிசகிழைப்பானேல் பலருக்கு அநீதி வழங்குவதாகும்.

இவ்வித்தியாசங்கள் நமது ராஜீய வாழ்க்கைக்கும் பொருந்தும். முன்பு தேசபக்தி கொண்டு போராடியது அன்னிய அரசாங்கத்தை, தற்போது தொண்டியற்றி வெல்வது நம்மனோர் துயிலை. அன்று நம்முடைய பக்தியை அடக்க எழும்பியது அன்னிய ஆதிக்கத்தின் அசுரபலம், இன்று நம்முடைய தவத்தைக் கலைப்பது நமது ஜனங்களுடைய அவிவேகமென்னும் மாய்கை. அக்காலத்தில் நாம்நாடியது சிறைக்கோட்டம், இக்காலத்து நாம் வதிவது கிராமத்தில். அப்பொழுது நாம் முயற்சித்தது அன்னியரால் உண்டாக்கப்பட்ட சட்டங்களை மறுக்க, இப்பொழுது நாம் முநப்படுவது நமது சுயேச்சைக்கு உரித்தாய வரம்புகளை அழைத்துக்கொள்ள.

ஒத்துழையாமை இயக்கத்தினின்றும் வீரிட்டு எழும்பிய பக்திப் பெருவெள்ளமானது நிர்மாணத் திட்டமென்னும் கால்வாய்கள் மூலம் வறுமையால் வரண்டு கிடக்கும் பாதநாடு முழுவதும் பாயவேண்டுமானல், ஆதியில் தோன்றிய தேசபக்தக் குழுப்பமானது உண்மைத் தொண்டர் கூட்டமாக மாறி பொதுஜன சேவைக்கு முற்படவேண்டும். இம்மாறுதலின் அவசியத்தைப் பொது வாழ்கையில் ஈடுபட்ட அனைவரும் கூடிய சீக்கிரம் உணரவேண்டும். தேசபக்தர்கள் தங்களுடைய மனப்பான்மையை இங்ஙனம் மாற்றிக்கொள்ளாவிட்டால், அவர்கள் தேச சேவைக்கு அருகராகமாட்டார்கள். ஒத்துழையாமை என்னும் பக்திமார்க்கத்திற்கும் நிர்மாணம் என்னும் கர்ம சாதனத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாட்டின் நலன் கருதும் பலரும் சிந்தித்து நோக்கி, தங்கள் இருதயத்தில் ஆர்வங் கொண்டெழும்பும் தேச பக்தி என்னும் சக்தியை கதர் தொண்டென்னும் சாதனத்தால் அடக்கியாள்வார்களாக.

(குடிநூல்)

## ஸர். தியாகராயர் திருநாள்.

### தென்னடெங்கும் கொண்டாட்டம்.

### உரையூர்.

திருச்சி—உரையூரில், ஸர். தியாகராயரின் திருநாள் இம்மாதம் 16, 17, 18-ந் தேதிகளில் கொண்டாடப்பட்டதென்றும், பிரதி தினமும் மாலையில், ஸர். தியகராயரின் உருவப்படத்திற்கு புஷ்பமாலைகள் சாத்தி, உபந்யாசங்கள் நடை பெற்றதென்றும், 18-ந்தேதி மாலை பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டதென்றும், ஒவ்வொரு தினமும் இவ்விழாவைக் கொண்டாடத் திரளான ஜனங்கள் வந்திருந்தார்களென்றும், உறையூர் தேவாங்க மகாஜன சபை காரியதரிசி ஸ்ரீமான். கொ.வெ.மு.லக்ஷமணய்யா நமக்கு எழுதுகிறார்.

### கும்பகோணம்.

கும்பகோணத்தில் ஸ்ரீமான்கள். ஆர். சி. வெங்கிட்டராம நாயுடு, ஏ. குப்புசாமி பிள்ளை, ஏ. பக்கிரியாபிள்ளை, கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை ஆகிய பல நண்பர்களின் முயற்சியால், ஸர். தியாகராயர் திருநாள் கொண்டாட்டம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மேலும், 16, 17-ந் தேதிகளில் சுமார் 1000 ஆதி திராவிடர்களுக்கு தியாகராயர் பேரால் போஜனமளிக்கப்பட்டதென்று ஸ்ரீமான். எஸ். நாராயணசாமி நமக்கு எழுதுகிறார்.

### ஓமலூர்

ஓமலூர் திராவிட சங்கத்தினதாவில், ஸர். தியாகராயர் திருநாள் கொண்டாட்டம் இம்மாதம் 16, 17, 18-ந் தேதிகளில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 18-ந் தேதியன்று, ஓமலூர் ஸ்ரீமான். மோளையக்கவுண்டர் தோட்டத்தில் 500 ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டதுடன், அன்று மாலை பள்ளிக்கூடச்சிறுவர்களுக்கு, பந்தயங்கள்வைத்து, திறமைகாட்டிய சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. மற்றும், தியாகராயரின் உருவப்படத்தை சிங்காரித்து, ஊர்வலம் செய்து, மாரியம்மன் கோவில் வரை சென்று, அங்கு மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் பலர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மகாநாடு முடிந்ததும், கதலி, பழம் சந்தன தாம்பூலம் பரிமாறப்பட்டு இத்திருவிழா முடிவடைந்தது என ஸ்ரீமான். ஒ. வ. கோவிந்தராஜுலு நாயுடு எழுதுகிறார்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்த நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.
ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரக்ஷையும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜெண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது "குடிஅரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ.பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் மேல் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாராகச் சேர விரும்புகிறவர்கள் ஷெயாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். மானேஜர்.

## வைத்திய சந்திரிகை.

வைத்திய சாஸ்திரத்தின் தத்துவத்தை எடுத்துச்சொல்லும் அருமையான மாதசஞ்சிகை. பத்திராதிபர் மதுரை பண்டிதர் S. நாராயண அய்யங்கார். பல வைத்திய நிபுணர்களால் எழுதப்படும் வைத்திய வியாசங்களும் மலிந்திருக்கும்.

வருடசந்தா ரூ. 2—0—0
வெளிநாட்டுக்கு ரூ, 3—0—0

மானேஜர்,
வைத்திய சந்திரிகை, கரூர்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி உழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## நவ இந்தியா.

தேச முன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

## விசேஷ அறிவிப்பு.

நமது "குடிஅரசு" பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ் ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தகசாலைகளில், விற்பனைசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

விலை அணா ஒன்று

மானேஜர்.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை சாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜ்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.